# ஆயுத மோதலின் செல்நெறிகளும் அவற்றுக்கான காரணங்களும்

டான் சிமித்




1. அறிமுகம் 134

2. 1990களில் ஆயுத மோதுகை 135

3. மோதுகைக் காரணங்கள் பற்றிய கொள்கைகள் 139

4. பின்புல காரணங்களும், முன்நிலை அம்சங்களும் 142

5. முறையியலும் வகையியலும் 143

6. அநீதியும், அணிதிரட்டலும் 145

7. இனக்குழும நிலையும், மோதுகையும் 146

8. முடிவுரை 151

9. உசாத்துணை,மேல் வாசிப்புக்கானவை 152

# ஆயுத மோதலின் செல்நெறிகளும் அவற்றுக்கான காரணங்களும்

டான் சிமித்

## 1. அறிமுகம்

1990 முதல் 1999இன் முடிவுவரை உலகெங்கும் 80 அரசுகளும் இரு துணை அரசுப்பிராந்தியங்களும் சம்பந்தப்பட்ட, 118 ஆயுத மோதுகைகள் இடம்பெற்றன. இவற்றின் விளைவாக ஏறக்குறைய அறுபது இலட்சம் மக்கள் இறந்தனர். மோதுகை ஆயுத யுத்தமாக வளர்வதைத் தடுப்பதற்கு நாம் முனைவதாயின், அல்லது அதில் தோல்வியடைகின்ற போது குறைந்தபட்சம் இயன்றவரை விரைவாகச் சண்டையை நாம் நிறுத்தக்கூடுமாயின், அத்துடன் தோற்றத்தில் தீர்வொன்று காணப்பட்டபின்னர் மீண்டும் யுத்தம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான வாய்ப்பை நாம் உச்ச அளவினதாக்கவேண்டுமாயின், ஆயுத மோதுகைகளையும் அவற்றின் காரணங்களையும் முதலில் நாம் முறையாகப் புரிந்து கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

இவ்வத்தியாயம் ஆயுத மோதுகையின் காரணங்கள்பற்றி அறியப்பட்டனவும், விளங்கிக் கொள்ளப்பட்டனவும் பற்றிய ஒரு சுருக்க, மேலோட்ட நோக்கை வழங்க முயலுகிறது. இந்த அறிவுக்கான கொள்கைநிலை விளக்கம் மட்டுப்படுத்தப்பட்டதெனினும் முக்கியமானதாகும். ஏனெனில் அதில் ஆயுதம் தாங்கிய மோதுகை எனும் நிகழ்வு பற்றிய எந்த ஒரு விளக்கமும் இல்லை. அதன் கண்ணுள்ள சிக்கற்பாடுகளையும் மாறுபடும் தன்மைகளையும் நோக்கும் போது இது ஆச்சரியத்தை ஏற்படுத்தக்கூடியதொன்றல்ல. மோதுகை அதிகரிக்கின்ற வாய்ப்பின் அறிகுறிகளுக்காகத் தனிப்பட்ட மோதுகைகளைப் பகுப்பாய்வுசெய்கின்றபோதும், வன்முறை அதிகரிப்பைத் தடுப்பதற்கான வாய்ப்புக்களைத் தேடுகின்றபோதும், இதில் கவனஞ்செலுத்தவேண்டுமென்பதற்கான பயனுள்ள வழிகாட்டலை அது வழங்குவதனால் அது முக்கியமானதாகும். நடப்புக் கோட்பாட்டியல் அறிவின் வரையறைகளையும், காரிய சாத்தியமான அறிவின் அபிவிருத்தியிலும், பரப்பலிலும் உதவுவதென்ற இந்த நூலின் குறிக்கோள்களையும் கொண்டு பார்க்கையில், இக்கட்டுரையிலுள்ள கொள்கைநிலையிலான ஆய்வுரை சார்பளவில் சுருக்கமானது எனினும், இங்கு கொள்கை வலியுறுத்தப்படாமல் ஆயுத மோதுகைகளை ஆராய்வதற்கும், பகுப்பாய்வு செய்வதற்குமான ஒரு பிரயோக முறையியலே வலியுறுத்தப்படுகின்றது.

இவ்வத்தியாயம் 1990களிலே காணப்பட்ட ஆயுத மோதுகைகள் நிகழ்ந்த முறையையும், இயல்பையும் ஆய்வுசெய்வதுடன் தொடங்குகின்றது. அதனைத்தொடர்ந்து அதுபற்றிய முறையியலுக்குச் செல்வதற்குமுன்னர், ஒரு மேல்நோக்காக மட்டுமன்றி, எதிர்கால உசாத்துணைக்கான ஒரு மூலமாக இந்நூல் அமைதல் வேண்டும் என்ற நோக்குடனேயே, தற்போதைய கொள்கைநிலைப்பட்ட அறிவு நிலையை மீளாய்வு செய்ய முனைகின்றது. ஆயுதம் தாங்கிய மோதுகையென்பது பல்வேறு காரணங்களால் தோன்றுவது என்பதிலும் பார்க்க வெவ்வேறுவகைப்பட்ட காரணங்களால் ஏற்படுத்தப்படுவதென்பது அது பற்றிய அச்சாணியான ஓர் எழுவினாவாகும். இந்நிலைமை அதற்கான வேறுபட்ட பலமட்ட கொள்கை நிலைப்பட்ட பகுப்பாய்வுகளை வேண்டி நிற்கிறது. அதன் காரணமாக முறையியல் பிரச்சினைகளிலும் பார்க்க வகைநிலை பிரச்சினைகளே முக்கியமாகும். இதன் காரணமாக முறையியல் வினாக்கள் உண்மையில் வகைநிலைபற்றியனவே. இந்த வகைநிலை வினாக்கள் கொள்கையும் தரவும் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என்பது பற்றியனவாகவே அமையும். இதன் காரணமாக இவற்றின் ஆராய்ச்சி முறையியல் வகைநிலைப்பாடு பற்றிய ஆய்வினையும் உள்ளடக்கி நிற்கும். இதன் காரணமாக தோற்றுவிக்கும் காரணிகளின் வகைபாடுகளையும் காரணங்களையும் இணைப்பதற்கு நீதி ஒருங்கு

சேர்ப்பு ஆகியனவை இணைந்த ஒரு எண்ணக்கருவை மேற்கொள்வதே பொருத்தமாகும். அத்துடன் குறுங்கால தேவையை நீண்டகாலத் தேவையுடன் இணைப்பதற்கும் சமூக பொருளாதார காரணிகளை அரசியலுடன் இணைப்பதற்கும் இந்நோக்கு பெரிதும் பயன்படும். இனக்குழும மோதுகை எனப்படும் வகைபாட்டினை மிக நுணுக்கமாகப் பார்ப்பதிலே மேற்கூறிய நிலைப்பாடு சித்திரித்துக் காட்டப்படுகிறது எனலாம் என்ற நிலைப்பட, ஏட்டிலுள்ளவாறு அதே வரைவிலக்கணத்தையும், தரவு விதிகளையும் பயன்படுத்துகின்றன. உப்சலா பல்கலைக்கழகத்தின் சமாதான மற்றும் மோதுகைத் துறையினால் தயாரிக்கப்பட்டு, சமாதான ஆராய்ச்சி சஞ்சிகையில் வருடாந்தம் வெளியிடப்படும் (பார்க்க, வலென்ஸ்ரீன் மற்றும் சொலன் பேர்க் 1996, 1997, 1998, 1999 மற்றும் 2000) தரவுகளுடன் ஒப்பிடுகையில் இத்தரவுகள் பரந்த உருவரையில் ஒத்துள்ள போதிலும், விவரத்தில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபட்டவையாகும். இத் தரவுத் தொகுதிகளும் ஆண்டொன்றுக்கு 25 யுத்த மரணங்களை உட்படுத்தலுக்கான தொடக்க நிலையாகப் பணன்படுத்துகின்றன. எனினும் நான் கூடிய துல்லியமான ஒரு மொத்தத்தொகை, கிடைப்பதாயுள்ள தரவுகளை அளவுக்கு மீறித் தேவைப்படுத்துவதாக அதனை நிராகரித்து, வருடாந்த மொத்தத்தைப் பலநூற்றுக்கணக்கான யுத்த மரணங்களின் சூழமைவில் கணிக்கின்றேன். வரைவிலக்கணத்தின் ஒரு பகுதியாக, குறைந்தது ஒரு பக்கத்திலாவது அங்கீகரிக்கப்பட்ட அரசொன்றின் ஈடுபாட்டை உள்ளடக்குவதில் உப்சலா குழுவை நான் பின்பற்றவில்லை. இது கோட்பாட்டினதும் பகுப்பாய்வினதும் வெவேறு வகைகளையும், மட்டங்களையும் கோருகின்றது. இக்காரணத்தின் நிமித்தம் முறையியல் சார்ந்த விடயங்கள் மாதிரிப்படிவ வரன்முறையானவை, அவை கோட்பாடும், தரவுகளும் ஒழுங்கமைக்கப்படுதல் தொடர்பானவை. இக்கட்டுரை பின்னர் காரணங்களின் வெவ்வேறு வகைகளையும், மட்டங்களையும் இணைப்பதற்கும், குறுகிய காலத்துடன் நீண்ட காலத்தைத் தொடர்புபடுத்துவதற்கும், அரசியல் முன்தோற்றத்துடன் சமூக பொருளாதாரம் பின்னணியைத் தொடர்புறுத்துவதற்கும் மிகச் சிறந்த வழியாக நீதியும், அணிதிரட்டுதலுமென்ற இணைந்த எண்ணக்கருக்களை இனங்காண்கின்றது. அது இனக்குழும மோதுகை எனக் குறிப்பிடப்படும் வகைப்பிரிவை மிக நெருக்கமாக ஆராய்வதன்மூலம் இதனை விளக்கிக் காட்டுகின்றது.

## 2. 1990 களில் ஆயுத மோதுகை

அரசாங்கம், ஆள்புலம் மீதான அதிகாரம் பற்றிய மோதல் தொடர்ச்சியுள்ள நன்கு மையஒழுங்கமைப்பு கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பகுதியினரிடையே காணப்படும், திறந்த நிலைப்பட்ட மோதல் நிலையே ஆயுத மோதல் நிலை என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. 1990 முதல் 1999வரை இடம்பெற்ற 118 ஆயுத மோதுகைகளில் பத்து மோதுகைகளை அரசுகளுக்கிடையிலான மோதுகைகளென இறுக்கமாக வரையறுக்கலாம். பெரும்பாலும் இமமோதுகைகள்தான் தலைப்புச் செய்திகளில் முனைப்பானவையாக அமைந்து, சமகால யுத்தங்கள் எவ்வாறு புரியப்படுகின்றனவென்ற பொதுமக்களின் கருத்தை உருவாக்குகின்ற போதிலும் சார்பளவில் ஒட்டுமொத்த யுத்தத்தின் ஒரு சிறு விகிதாசாரத்தையே இன்று அவை ஏற்படுத்துகின்றன. ஐந்து மோதுகைகள் சுதந்திரத்துக்கான யுத்தங்களாகக் இறுக்கமாக வரையறுக்கப்படக்கூடியபோதிலும், மேலும் அநேக யுத்தங்களில் கிளர்ச்சியாளர்களும் தமது மோதுகைகளை இவ்வாறே விளக்குவர். நூறு யுத்தங்கள் பெரும்பாலும் அடிப்படையில் அல்லது முற்றுமுழுதான உள்ளக மோதுகைகளாயிருந்தன. அத்தகைய நெகிழ்ச்சியான சொற்பிரயோகத்தைப் பயன்படுத்தவேண்டுமென்ற உண்மை, எந்த அளவுக்கு அநேக யுத்தங்கள் செம்மையான வகைப்படுத்தலை மீறுகின்றனவென்பதைக் காட்டுகின்றது. எடுத்துக்காட்டாக, அந்த மொத்த 100 யுத்தங்களில் 1999இலும் 2000இலும் உள்ளடக்கப்படாத இரு யுத்தங்கள் தொடர்பில் சண்டையின் பெரும்பகுதி நடைபெற்ற இடம் அயல்நாடான சோமாலியா என்பதைத் தவிர, அவ்விரண்டும் எல்லா அம்சங்களிலும் முழுமையாக எத்தியோப்பிய உள்ளக விவகாரமாகும். கொங்கோ சனநாயகக் குடியரசில் (முன்னர் ஸெயிர்) 1998 முதல் 2000 வரை தொடர்ந்த யுத்தம் தன்னளவில் ஒரு காலதேசம்

கடந்த யுத்தமென்று பெரிதும் கருதப்படக்கூடியதான தனியொரு வகையைச் சேர்ந்ததாகும். அது பெருமளவில் சனாதிபதி லோறன்ற் கபிலா தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்காகச் சண்டையிட்ட ஒரு சிவில் யுத்தமாகவும், பகுதியளவில் பிராந்திய அதிகாரத்துக்கும், செல்வாக்கிற்குமான ஒரு சர்வதேச யுத்தமாகவும் இருந்தது. அங்கோலா, சாட், நமீபியா, சூடான், சிம்பாப்வே என்பவை சனாதிபதி கபிலாவின் படைகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்த அதேவேளையில் ரூவாண்டாவும், உகண்டாவும் அவற்றுக்கெதிராகப் போராடியதுடன் 2000 ஆம் ஆண்டில் ஒன்றையொன்று எதிர்த்தும் போராடின.

**அட்டவணை 1 : ஆயுத மோதுகைகள் 1990-1999**

| பிராந்தியம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆசியா - பசுபிக் | 21 | 21 | 25 | 24 | 23 | 21 | 22 | 14 | 19 | 20 |
| மத்திய, தென் அமெரிக்கா | 7 | 6 | 5 | 3 | 4 | 5 | 4 | 2 | 3 | 2 |
| வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு | 7 | 8 | 8 | 9 | 9 | 9 | 8 | 8 | 6 | 4 |
| சஹாரா சார்ந்த ஆபிரிக்கா | 17 | 22 | 18 | 18 | 23 | 21 | 18 | 19 | 18 | 16 |
| ஐரோப்பா | 4 | 10 | 12 | 8 | 6 | 4 | 2 | 3 | 3 | 5 |
| மொத்தம் | 56 | 67 | 68 | 62 | 65 | 60 | 54 | 57 | 49 | 47 |



அட்டவணை 1 சுட்டிக்காட்டுகின்றவாறு, உலகளாவிய வருடாந்த ஆயுத மோதுகைகளின் எண்ணிக்கை, 1990இல் 56 ஆக இருந்த மோதுகைகள் (அத்துடன் 1989 இல் 47 இல் இருந்து) 1992 இல் 68ஆக அதிகரித்தன. 1990 களின் தொடக்கத்தில் பனிப்போர் முடியும் என்ற நம்பிக்கை கைவிடப்பட்டு புதியதொரு நன்நம்பிக்கையின்மை மேலோங்கியது. பனிப்போர் காலத்தின் பின்னர் ஏற்பட்ட புதிய பேரலைக்கு எதிர்வினையாக அலையின் தாக்கத்தின் விளைவான ஒரு புதிய அவநம்பிக்கை துரிதமாக மேலோங்கியது. எனினும் உண்மையாகப் பார்க்குமிடத்து, அதன்பின்னர் ஒவ்வோராண்டும் ஆயுத மோதுகைகளின் எண்ணிக்கை ஸ்திரப்படுத்தப்பட்டதுடன் பின்னர் வீழ்ச்சியடைந்துமுள்ளது. ( 1990-1999 வரை இடம்பெற்ற 118 போர்களில் 100 அடிநிலையில் உள்ளூர்ப் போர்களாகவும், 2 உள்ளூர்ப் போர்த்தன்மைகளைக் கொண்டனவாகவும், 5 சுதந்திரத்துக்கான போர்களாகவும், 10 அரசுகளுக்கிடையிலான போர்களாகவும், 1 பல் தேசங்களினூடே நடந்த போர்களாகவும் காணப்பட்டன).

1990 களின் தொடக்கத்தில் யுத்தங்களின் வருடாந்த நிகழ்தகவில் ஏற்பட்ட அதிகரிப்பில் மூன்றிலிரண்டு பங்கு (ரஷ்யா, துருக்கி, காகசஸ் அடங்கலாக) ஐரோப்பாவில் இடம்பெற்ற புதிய வன்முறை மோதுகைகள் காரணமாக ஏற்பட்டவையாகும். அக்காலத்தில் அப்பிராந்தியம் துரிதமாக உலகில் ஆகக்கூடிய வன்முறைப் பிராந்தியங்களில் ஒன்றாகியது. 1997க்கும் 1998 க்கும் இடையில் கூர்மையான வீழ்ச்சி ஏற்பட்டது, 1992இன் பின்னர் ஆயுத மோதல்களின் வருடாந்த எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பெருமளவுக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக வந்ததாகும். ஐரோப்பாவில் வன்முறை மோதுகையின் கூர்மையான எழுச்சி, யூகோசிலாவியா ஐக்கிய சோசலிச சோவியத் குடியரசு ஆகியனவற்றில் ஏற்பட்ட சிதைவுகள் காரணமாக தோன்றியவையாகும். இவை பால்கன்சிலும், காகசசிலும் பெரிதும் காணப்பட்டன. இம் முனைப்பான எழுச்சி இப்போது தணிந்துவிட்டதென்ற உண்மையானது, 1990களின் தொடக்கத்தில் ஐரோப்பாவில் போர்களின் வளர்ச்சிப் பெருக்கம், அக்காலத்தில்

அனேக கருத்துரையாளர்கள் அஞ்சியவாறல்லாது, அவை அக்கண்டத்தில் ஒரு புதிய வன்முறை மோதுகைக் காலத்துக்குக் கட்டியங் கூறுவனவாக அமையவில்லையென்பது தெளிவாயிற்று. மாறாக, அம்மோதுகைகள் யூகோசிலாவியாவிலும், சோவியத் ரஷியாவிலும் ஏற்பட்ட அதிகார முறைமைகளின் தகர்வைத் தொடர்ந்து ஏற்பட்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மறுசீராக்கத்தின் வன்முறை அறிகுறிகளாகவும், அவல அறிகுறிகளாகவும் காணப்பட்டன. இவை ஏற்படுத்திய மாற்றங்கள் தேசிய சர்வதேச மட்டங்களில் நன்கு உள்வாங்கப்பட்டமை காரணமாக இவற்றினால் ஏற்பட்ட பலாபலன்கள் திடீர்த்தன்மை அற்றனவாகவும் வன்முறைத்தன்மை குறைந்தனவாகவும் அமைந்தன.

இருந்தபோதிலும், இம்முடிவினால் உருவாகின்ற அதீத நம்பிக்கையெதுவும் மேலும் இரு காரணங்களினால் மட்டுப்படுத்தப்படவேண்டும். முதலாவது, உலகளாவிய மட்டத்தில் பழைய மோதுகைகள் பெருமளவுக்கு இன்றுமுள்ளன. 1999இல் தீவிரமாயிருந்த ஆயுத மோதுகைகளில் 66 சதவீதமானவை ஐந்தாண்டுகளுக்குக் கூடிய பழமையானவையாகவும், 30 சதவீதமானவை 20 ஆண்டுகளுக்கு மேல் நீடித்தனவாகவும் இருந்தன. இந்த நெடுங்கால ஆயுத மோதுகைகளை முடிவுக்குக்கொண்டுவருதல் மிகக்கடினமானதென எண்பிக்கப்பட்டுள்ளது. எனவே உலகம் ஒரு புதிய அதிகரித்த சமாதான காலத்தினுள் பிரவேசிக்கின்றதென்று கூறுவதற்கில்லை. இரண்டாவதாக, ஐரோப்பாவில், 1980களின் பிற்பகுதியில் அல்லது 1990களின் தொடக்கத்தில் ஆரம்பமான ஆயுத மோதுகைகளில் பெரும்பாலானவை, இப்போது தீவிரமிழந்துள்ள போதிலும், உண்மையில் அவை ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. சரியாகச்சொல்வதாயின் அவை இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

“முடிவுற்றுப் போனது” மற்றும் “இடைநின்றது” என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு இன்றைய ஆயுத மோதுகைப் பிரச்சினையை விளங்கிக்கொள்வதற்கு முக்கியமானது. யுத்தநிறுத்தங்கள் கைச்சாத்திடப்பட்ட பின்னர் மட்டுமன்றி, சமாதான உடன்படிக்கைகள் முடிவாக்கப்பெற்றதன் பின்னரும் கூட மீண்டுந் தொடங்குகின்ற யுத்தங்களால் சர்வதேச அரசியற் காட்சிப்பரப்பு உருக்குலைகின்றது. கடந்த தசாப்தத்தில் மட்டும், யுத்தநிறுத்தங்கள் அல்லது வெளிப்பார்வைக்கு சமாதான உடன்படிக்கைகள் போன்றமைந்தவை மேற்கொள்ளப்பட்டதன்பின்னர், மீண்டுந் தொடங்கிய யுத்தங்களில் அங்கோலா, புருண்டி, கம்போடியா, செச்னியா, குரோஷியா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, எரித்திரேயா, ஈத்தியோப்பியா, கொசோவோ, லைபீரியா, பிலிப்பைன்ஸ், ருவண்டா, சியராலியோன், இலங்கை ஆகியவற்றில் இடம்பெற்றனவற்றைக் கூறலாம். இந்த யுத்தங்கள் பெரும்பாலும் முன்னரை விடக் கூடிய ஆக்ரோஷத்துடனும், அழிவுடனும், ஏறக்குறைய எப்போதும், குறிப்பாக சிவிலியன் குடிசனத்துக்குப் பெரும் இழப்புகளை ஏற்படுத்தும் வகையில் மீண்டும் நடைபெறுகின்றன.

யுத்தம் மீண்டுந் தொடங்குவதற்கு அநேக வேறுபட்ட காரணங்கள் உள்ளன. அவற்றை நான்கு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம். முதலாவது, ஒரு தரப்பின் அல்லது இருதரப்புகளினதும் ஒளிவுமறைவற்ற நேர்மையீனம் சியெராலியோனில் புரட்சிகர ஐக்கிய முன்னணி (RUF) இதற்கொரு நல்ல உதாரணமாகும், எந்தவொரு உடன்படிக்கையையும் பேணப்படும் என்று நம்பவே முடியாது. இரண்டாவது, ஒரு தரப்பினது அல்லது இரு தரப்புகளினதும் ஏமாற்றம். வெளியிலிருந்து பார்க்கும்போது இதுவும் பெரும்பாலும் அதே நேர்மையற்றதாகத் தோன்றலாம். சமாதான உடன்படிக்கையொன்று ஒரு தரப்பால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றமை நிபந்தனைக்குட்பட்டதான அநேக சந்தர்ப்பங்கள் உள்ளன. எனினும், அந்நிபந்தனை பகிரங்கமாகத் தெரியப்படுத்தப்படுவதோ, உடன்படிக்கையின் ஒரு பகுதியாகவோ இருப்பது இல்லை. சிலசமயங்களில் யுத்தத்துக்குப் பிந்திய தேர்தலில் ஒரு தரப்பு வெற்றிபெறவேண்டுமென பெரிதும் எதிர்பார்ப்பதனால், அக்காரணத்துக்காகமட்டும் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட உடன்படுகின்றமை பின்னர் அவ்வெதிர்பார்ப்பு நிறைவேறாத பட்சத்தில் அவை மீண்டும் யுத்தத்துக்குச் செல்கின்றன. அங்கோலாவின் “யுனிட்டா” (UNITA) ஓர் உதாரணமாகும்.

மூன்றாவது காரணம் ஒரு தரப்பில் அல்லது இரு தரப்புகளிலும் காணப்படும் உள்ளகக் கருத்துவேறுபாடுகளும், தரப்புகளின் துண்டாடப்பட்ட தன்மையுமாகும். இதுகூட நேர்மையீனமானதாகத் தோன்றலாம். சமாதான உடன்படிக்கைகள் பெரும்பாலும் ஒவ்வொரு தரப்பினுள்ளும் காணப்படும் பதற்றங்களையும், மோதுகைகளையும் வெளிக்கொணர்கின்றன. யுத்தத்தின் பொருட்டுப் பேணப்பட்டுவந்த ஒற்றுமை சமாதானம் ஏற்படும்போது விரைவாகச் சிதைந்துவிடுகின்றது.

மோதுகையின் ஒரு பக்கத்திலுள்ள கூட்டமைப்பின் ஒரு பகுதியினருக்கு நெருங்கிவருகின்ற சமாதானம், நீண்டகால இலக்குகளை நிறைவேற்றுவதற்கான அவர்களின் ஆற்றலைக் குலைக்கின்ற ஓர் அச்சுறுத்தலாகப் பெரும்பாலும் தோன்றக்கூடும். இச்சூழமைவில், வட அயர்லாந்தில் "ஐஆர்ஏ" யிலிருந்து பிரிந்து சென்ற பிளவுபட்ட குழுக்களை, அல்லது இஸ்ரேலிலும், மேற்குக் கரையிலும் இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீனிய போராளிகளினால் சமாதானச் செயல்முறை நிராகரிக்கப்பட்டமையையும் எண்ணிப்பாருங்கள்.

யுத்தம் மீண்டும் தொடங்குவதற்கான நான்காவது காரணம் ஆயுத மோதுகையின் அடிப்படைக் காரணங்கள் தொடர்ந்தும் காணப்படுதல். மோதுகையின் நீண்டகாலக் காரணங்களில் கவனஞ்செலுத்தத் தவறுதல் புனரமைப்புக்கான எல்லா முயற்சிகளும் ஆகக்கூடியது வெறும் வெளிச்சோடனையாக முடியுமென்பதைத்தான் கருதுகின்றது. பொஸ்னியா - ஹெர்ஸிகொவீனாவில் யுத்த முடிவுக்கான டேற்றன் உடன்படிக்கையின் ஐந்தாண்டுகளின் பின்னரும் அவதானிப்பாளர்கள் சர்வதேச ஆயுத சமாதானப்படை மீளப்பெறப்பட்டால் யுத்தம் மீண்டும் தொடங்குமென்ற கடும் ஆபத்தைத்தான் காண்கின்றனர்.

மேலே சுருக்கமாகக் கூறப்பட்டவாறு, சமகால யுத்தத்தின் ஒரு பிரதான அம்சமான - நீண்டகால யுத்தம் பொதுவானதென்ற உண்மைக்கு ஒரு பிரதான விளக்கம் சமாதான உடன்படிக்கைகளின் அடிப்படையான உறுதியற்ற நிலையாகும். டேபர் (1970, ப.45) சமகால யுத்தம் அநேக ஆண்டுகள் நீடிப்பதற்கான இரண்டாவது காரணமொன்றைக் கிளர்ச்சிப் படைகளின் சார்பளவிலான வலுக்குறைவுரீதியாக விளக்குகின்றார். கெரில்லாக்கள் எங்கு, எவ்வாறு தாக்குவதென்று தீர்மானிப்பதன்மூலம் சண்டையின் உக்கிரத்தையும், வேகத்தையும் கட்டுப்படுத்தமுடியும், அரசாங்கப் படைகள் பிரதம இலக்குகளின் அமைவிடத்தைக் கண்டறிந்து அவற்றை முன்கூட்டியே தாக்கக்கூடியனவாகவும், விரும்புவனவாகவும் இருந்தாலன்றி விளைவு ஒரு நீண்ட மட்டுப்படுத்தப்பட்ட யுத்தமாக குமுறிக்கொண்டிருந்து இடையிடையே வெடிக்கின்ற ஒரு மோதுகையாக இருக்கும்.



இதனால்தான் சண்டை வலயங்கள் பெரும்பாலும் நாட்டின் ஒருபகுதிக்கு வரையறுக்கப்பட்டனவாயுள்ளன. இதனால் நிருபர்கள், அரசியல்வாதிகள், ஆராய்ச்சியாளர்கள், வணிகர்கள் இராஜதந்திரிகள், உலகவங்கி நிபுணர்கள் மற்றும் வேறு வெளியாட்கள் யுத்தத்தால் உருக்குலைந்த ஒரு நாட்டின் தலைநகருக்கு வருகை தருதலும், எனினும் யுத்தமொன்று நடந்துகொண்டிருக்கின்றதென்று அறியாதிருத்தலும் முற்றிலும் சாத்தியமானதே. அநேக ஆயுத மோதுகைகள் ஒரு குறிப்பிட்ட இட எல்லைக்குட்பட்டனவாகவும், பல ஆண்டுகளாக முடிவின்றிச் சார்பளவில் குறைந்த மட்டத்தில் தொடர்வனவாகவும் இருப்பதனால் சர்வதேசச் செய்தி ஊடகங்களுக்கு அவை சுவாரசியமான செய்திகளாக அமைவதில்லை. இம்மோதுகைகள் மிக அரிதாகவே வெற்றிகள், வாகைசூடுதல்கள், பேரழிவுகள் போன்ற தெட்டத்தெளிவான நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றன. அவை அவற்றில் பங்குபற்றுபவர்களுக்கு ஒரு மெதுவான சித்திரவதையாக, வெறுமனே காலங்கடத்துகின்றன. எனினும், அவை சடுதியாகவும், உக்கிரமாகவும் அதிகரிக்கும் ஆற்றலற்றவையென்ற மாயையை இது உருவாக்கக்கூடாது. அவ்வாறு அதிகரிக்கும்போது சர்வதேச அவதானிப்பாளர்களுக்கு அது பெரும்பாலும் தெளிவான நீலவானத்திலிருந்து திடீரென்று வெளிப்பட்டதாகத்தோன்றும். அதுவே 1994இல் ருவண்டாவில் இடம்பெற்ற படுகொலைக்களரிக்கான கருத்து எதிரலையாயிருந்தது. இது ஒருபுறமிருக்க, வெகுசனப்படுகொலைகள் திரும்பத் திரும்ப நடந்த

சுற்றுகளின் வரலாற்றுப் பின்னணியில் அப்படுகொலைகள் இடம்பெற்றதுமட்டுமன்றி, இனியெதுவும் செய்வதற்கில்லையென்ற காலம்வரை, நெருங்கிவருகின்ற அவலத்துக்கான அநேக அறிகுறிகள் புறக்கணிக்கப்பட்டனவென்பதும் இப்போது தெரியவந்துள்ளது (அடெல்மன் மற்றும் சுஹர்கே 1996). அப்போது காலம் மிகவும் பிந்தி விட்டது.

## 3. மோதுகைக் காரணங்கள் பற்றிய கொள்கைகள்

ஆயுதம் ஏந்துவதென்ற முடிவானது, ஒரு பரந்த வீச்சைக்கொண்ட நிலைமைகளிலும், சூழ்நிலைகளிலும் அநேக செயற்பாட்டாளர்கள் சம்பந்தப்படுகின்ற ஒரு சிக்கலான முறைவழியாகும். எனவே யுத்தமொன்றின் திடீர் வெடிப்புக்கான வரலாறு பொதுவாகச் சிக்கலானதாகையால் வரலாற்றாசிரியர் எவ்வெக்காரணிகளை வலியுறுத்துவதென்றும், எந்தச் சான்றை நம்புவதென்றும் மிகக்கவனமாகவும், நுட்பமாகவும் வேறுபடுத்தித் தெரிவுகளைச்செய்யவேண்டும். ஒரு பொதுவான புலன் நிகழ்வாக ஆயுத மோதுகையின் காரணங்களுக்குக் கொள்கைரீதியிலான விளக்கங்களை விருத்திசெய்ய முயற்சித்தலானது, பல்வகைப்பட்ட, செயலெதிர்ச் செயல்விளைவுடைய மாறிகளின் பகுப்பாய்வை உள்ளடக்கும். 1945 காலத்துக்குப் பிந்தியதைப்போன்ற அல்லது கெடுபிடியுத்தம் முடிவடைந்ததன் பின்னரான ஆண்டுகளைப்போன்ற மட்டுப்படுத்திய ஒரு காலப்பகுதியைப் பார்த்தாலும்கூட இதுவே உண்மையாகும். வெல்ச் (1993, ப.8) சுட்டிக்காட்டுகின்றவாறு யுத்தத்துக்கு அவசியமான நிலைமைகள் மிகச் சிலவாகவும், போதுமான நிலைமைகள் மிக அனேகமானவையாகவும், இவற்றில் ஒரு சில மட்டும் தான் எந்தத் தனியொரு மோதுகைக்கும் ஏற்புடையனவாகவும் இருப்பதனால், இப்பணி சிக்கல் மிகுந்ததாகும். இரண்டு அல்லது அதற்குக் கூடிய தரப்புகளுக்கிடையில் பிணக்கொன்று இருக்கும் வரையிலும், சண்டையிடுவதற்கான ஆயுதங்கள் கிடைக்கத் தொடங்கியவுடனும் யுத்தம் சாத்தியமானதே. எனினும், யுத்தத்தை நிகழக்கூடியதாக்குவது எதுவென்பது மேலும் சிக்கல்மிக்க ஒரு வினாவாகும்.



குர்(1970) ஹொறோவிற்ஸ் (1985), ரப்போபோர்ட் (1989) போன்ற கல்விமான்களின்ஆய்வு எவ்வாறிருப்பினும், ஆயுத மோதுகையின் காரணங்கள்பற்றி 1990க்கு முன்னர் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் பெரும்பகுதி சர்வதேச மோதுகையில் கவனத்தைச் செறிவாக்கியது. குறைந்தபட்சம் 1945இல் இருந்தாயினும் சிவில் அல்லது உள்நாட்டு மோதுகைகள், சர்வதேச அல்லது அரசுகளுக்கிடையிலான மோதுகைகளைவிடக் கூடிய அளவில் பொதுவானவையாக இருந்துள்ளதனால் இது குறிப்பிடத்தக்கதாகும் (சிங்கர் 1996 ப. 35). எனினும், உலகளாவிய ஒரு கண்ணோட்டத்தில் உள்நாட்டு அல்லது சிவில் மோதுகைகளின் சார்பளவிலான முக்கியத்துவம் பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர் மட்டும்தான் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அவ்வளவு கிட்டிய காலத்திலும்கூட மிச்சிகன் பல்கலைக்கிழகத்தின் யுத்தத்தொடர்பு நிலைமைகள் தரவுத்தளம் பற்றிய ஒரு பிரதம பகுப்பாய்வு சார்ந்த மீளாய்வு முடிவுகள் ஏறக்குறைய முற்றுமுழுதாக அரசுகளுக்கிடையிலான யுத்தங்களில் ஒருமுகக் கவனஞ் செலுத்தின (வஸ்குவெஸ் 1987). எனினும், 1990 இல் இருந்து, நிறுவப்பட்ட இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட அரசுகளுக்கிடையிலல்லாத ஆயுத மோதுகைகளின் காரணங்கள் பற்றிய புலமைவாய்ந்த ஆராய்ச்சியினதும், விடயவிதானத்தினதும் நோக்கெல்லையில் ஆழமான பதிவை ஏற்படுத்தும் வளர்ச்சி காணப்பட்டுள்ளது. உள்நாட்டு மோதுகைகள் பற்றிய நடைமுறை ஆராய்ச்சி குறிப்பாக இனக்குழுமச் சூழல், அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளில் கவனத்தை ஒருமுகப்படுத்துகின்றது.

சார்பளவிலான இழப்புக் கோட்பாடு (குர் 1970), குழுக்களின் எதிர்பார்த்த சுபீட்சத்துக்கும், அதிகாரத்துக்கும் உண்மையில் எட்டிய சுபீட்சத்துக்கும், அதிகாரத்துக்கும் இடையிலான வேறுபாட்டை அடிப்படையாக்கொண்ட ஒரு விளக்கத்தை அளிக்கின்றது. இவ்வணுகுமுறை, பொருளாதார மற்றும் அரசியற்காரணிகளுடன் இணைந்து செல்கின்ற இனத்துவக்காரணிகளுக்குக் கூடிய வெளிப்படையான முக்கியத்துவமளிக்கின்ற குழு உரித்துடைமைக் கோட்பாட்டுடன் (ஹொறோவிற்ஸ் 1985) நெருங்கிய

தொடர்புடையது (மேலும் பார்க்க குர் 1995). எனினும் இனக்குழும வேற்றுமை தன்னளவில் யுத்தத்துக்கு ஒரு காரணமாகத் தோன்றவில்லை. இல்லாதிருப்பின் ஆகக்கூடிய இன வேற்றுமைகளைக்கொண்ட அரசுகள்தான் ஆகக்கூடிய யுத்தச் சாய்வுடையனவாயிருக்கும். ஆனால் உண்மையில் அவ்வாறில்லை (சிமித் 1997, ப.30). உண்மையில் இன மற்றும் சமய உட்பிரிவுகளாக வேறுபடுத்தலானது ஒருவேளை வேற்றுமையின் மத்தியிலும் ஒன்றுகூடி வாழ்வதற்கான திறன்களைக் கற்றுக்கொள்வதற்கு வேற்றுமைப்பட்ட குழுக்களுக்கு ஊக்கமளிப்பதனால் அத்தகைய வேறுபடுத்தல் வன்செயல் மோதுகை ஆபத்தைக் குறைக்கவும்கூடும் (கொலியர் 1999). எனினும் கற்றுக் கொள்கின்ற இம்முறைவழி தோல்வியடைகின்றபோது இனவேற்றுமை மோதுகையை மேலும் தீவிரமாக்குவதாகவும், அது கடுமையாக உயருகின்ற சாத்தியத்தை அதிகரிப்பதாகவும் மாறக்கூடும். ஏனென்றால் திட்டவட்டமாக அது அரசியல் அணிதிரட்டலுக்கான வளமான ஒரு விளைநிலத்தை வழங்குகின்றது. இதற்கு ஒரு சிறந்த உதாரணம் 1990களின்போது யூகோசிலாவியா கூறுகளாகச் பிரிந்து போனமையாகும். அது கீழே ஆராயப்பட்டுள்ளது.

சூழலின் தரக்குறைவுக்கும், மோதுகைக்கும் இடையிலான தொடர்புகள்பற்றிய ஆராய்ச்சி, வன்முறையை நாடாமல் மாறிவருகின்ற சூழலுக்கேற்ப இசைவாகச் செயற்படுவதற்கான அரசுகளினதும், சமூகங்களினதும் வேறுபடுகின்ற (சில சமயங்களில் பெரும் அழிவை ஏற்படுத்துமளவுக்குக் குறைவான) ஆற்றலை ஆராய்கின்றது (ஹோமர்- டிக்ஸன் 1994). எனினும், சூழலலின் சீரழிவு முதல் வன்முறை மோதுகைக்கு வழிவகுக்கின்ற குறிப்பிடத்தக்க, எளிமையான, நேரடியான தொடர்புகளை இனங்கண்டுள்ள அவ்வாராய்ச்சி அணுகுமுறைகளுக்கெதிரான கடுமையான ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன (கிளெடிற்ஸ்ச் 1998, லிப்ஷெற்ஸ் 1997). அவ்வாதத்தின் மிக அண்மைக்கால விளக்கம் அதன் கொள்கைநிலைப்பட்ட கோரிக்கைகளின் முக்கியத்துவத்தைக் கணிசமான அளவில் குறைத்துக்கூறுகின்றது. (ஹோமர் டிக்ஸன் 1999). ஹெய்ட்டி மற்றும் பிலிப்பைன்சில் காணப்படுவதனைப் போன்ற சில ஆயுத மோதுகைகளின் காரணங்களை, சூழல் சீரழிவுடன் தொடர்புபடுத்தாமல் புரிந்துகொள்ளமுடியாதென்பதே இப்போதுள்ள வாதமாகும்.



ஜனநாயக அரசுகள் பெரும்பாலும் ஒன்றோடொன்று ஒருபோதும் யுத்தத்துக்குச் செல்வதில்லையென்பது அரசியல் முறைமைகளுக்கும், சமாதானத்துக்குமிடையிலான தொடர்புபற்றிய ஆராய்ச்சி அவதானிப்புகள் மூலம் தெரியவருகிறது. (ரஸ்ஸற் 1993). லெவி (1989 ப.270) இது பற்றி லெவி குறிப்பிடும் போது "சர்வதேச உறவுகள் பற்றிய அனுபவ நடைமுறை விதிகளுக்கு மிக அண்மித்ததாக இது அமைவதாகக் கூறுகிறார். அவர் இவ்வாறு கூறியமை பலத்த வாத விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. அனுபவ நடைமுறை வலு நிலையிலும் கொள்கை நிலைப்பட்ட வலு நிலையிலும் இந்த அவதானிப்பு பொருத்தமானதா என்பது பற்றிய விவாதிப்பு உண்டு. இத்தகைய ஒரு முடிவு தவறுதலாக வழிநடத்தப்பெற்ற ஆராய்ச்சி முனைப்பொன்றினது பெறுபேறே என மக்மிலன் கூறுகிறார். மேற்கூறியது சம்பந்தமாக எண்ணக்கரு நிலைப்பட்ட, கொள்கை நிலைப்பட்ட தெளிவுபடுத்தல்கள் மேலும் அவசியமென்று கருதப்பட்டாலும்கூட இந்த அவதானிப்பானது ஓர் அனுபவ நடைமுறை உண்மையாக பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஆயுதம் தாங்கிய மோதுகையின் காரணம் பற்றிய ஆராய்சிகள் தொடர்பாக மிகுந்த சூடான விவாதத்துக்குள்ளாகியிருப்பது, ஜனநாயக அரசுகள் தம்முள்ளே சமாதான நிலைப்பட்டனவாக இருப்பது போன்று ஒன்றோடொன்று சமாதான நிலையில் இருக்கின்றனவா என்ற முக்கியமான வினாவாகும். அவை தம்மகத்தே சமாதானமாக இருப்பதிலும் பார்க்க ஒன்றோடொன்று சமாதானமாக இருப்பதே அதிகம் என ரம்மல் கூறுகின்றார். ஆனால் றிஸ்சே- கப்பன் இம்முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை. வெவ்வேறு வகைப்பட்ட ஜனநாயக நாடுகளிடையே மோதுகை இருப்பது பற்றி பேசும் போது ஹேகர், கேற்ஸ் மற்றும் கிளெடிற்ஸ்ச் (1999) ஆகியோர் ஒரு முக்கியமான கருத்து நெளிவினை ஏற்படுத்தியுள்ளனர்.

இவர்களுடைய அபிப்பிராயப்படி அதிக ஜனநாயக ஆட்சி நிலவாத அல்லது அதிக ஏகாதிபத்திய ஆட்சிகள் நிலவாத நாடுகள்தான் இந்நிலைக்கு உள்ளாகுகின்றன என்பது ஹேகர், கேற்ஸ் மற்றும் கிளெடிற்ஸ்ச் ஆகியோரின் கருத்தாகும். ஜனநாயகத்தை நோக்கிய மாறுதலானது ஆபத்துக்கள் நிறைந்ததாகும். (ஜக்கர்ஸ் மற்றும் குர் 1995, ப.477-8). இந்த வாதமானது ஏற்கனவே சமஸ்டி முறையினுள் இருந்து அமைப்பியல் நிலைப்பட்ட மாற்றங்களுக்குட்பட்டிருந்தனவான முன்னர் யூகோசிலாசியாவ, சோவியத் ரஷ்யா ஆகியனவற்றுள் வந்த நாடுகளில் ஏற்பட்ட வன்முறைகள் பற்றி விளங்கிக் கொள்வதற்கு உதவுகின்றது. அதேபோன்று சுகார்த்தோவின் ஆட்சி முடிவில் இந்தோனேசியாவில் ஏற்பட்ட வன்முறை கிளர்ச்சி பற்றி விளங்கிக்கொள்வதற்கும் இது உதவுகின்றது.

ஓட்டுமொத்தத்தமாக பார்க்கும் பொழுது பொருளாதார காரணிகளே இவ்விடயத்தை தீர்மானிக்கும் சக்தியாக அமைகின்றன. இங்குள்ள அச்சாணியான காரணி பொருளாதார அபிவிருத்தியானது குறைந்த (கீழ்)மட்டத்திலிருப்பதே. (ஹோஜ் மற்றம் எல்லிங்சன் 1998) விகிதாசார அளவுக்கு மீறிய முறைமையில் விவசாய உற்பத்தியில் ஈடுபடும் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் சராசரி குறைந்திருப்பதன் மூலமும் உலக சந்தையில் ஏற்படும் விற்பனை பண்டங்கள் மற்றும் முதல் நகர்வுகளினால் பாதிப்படையக்கூடிய பொருளாதாரங்கள் உள்ள இடங்களிலும் இது தென்படும். (அவெரி மற்றும் ரப்கின் 1986). ஹோஜ் மற்றும் எல்லிங்சன் (1998), ஓவினன் (1997) மோசமான பொருளாதார நிலைமைகளுடன் ஜனநாயக வாய்ப்புவழிகள் இல்லாமையை ஒரு முக்கிய இரண்டாம் நிலைக் காரணியாக இனங்காண்கின்றார். எனினும் வறிய சமூகங்களில்கூட கிடைப்பதாயுள்ள பொருளாதார உபரி எவ்வளவு சிறியதாயினும் அதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தலைவர்கள் வழமையாக ஒருவரோடொருவர் போட்டியிடுகின்றனரென்று கொலியர் (1999, மேலும் பார்க்க கொலியர் மற்றும் ஹோ.ஃபிளர் 1999) முன்வைத்த வாதங்களினாலும், சான்றுகளினாலும் இம் முடிவுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. வறிய சமூகங்களில் உள்ளவாறு அல்லது பெருங்கேடான மந்தநிலை நிலவியவற்றில் உள்ளவாறு கிடைப்பதற்குள்ள உபரி சிறியதாகவுள்ளபோது அதற்கான போட்டிதீவிரமானதாக இருக்கக்கூடுமென்பதனால் ஒரு வன்முறை எழுச்சி ஒரு அதிகபட்ச சாத்தியப்பாடாயிருக்கும். லைபீரியாவில் 1989 முதல் 1997 வரை நிலவிய பயங்கரமான வன்முறை, சியராலியோனில் 1991 முதலான யுத்தம், அங்கோலாவில் பல தசாப்தகால யுத்தநிலை, புருண்டியிலும், ரூவாண்டாவிலும் ஒன்றன் பின் ஒன்று வரும் ஒரு சுற்றாக நடந்த படுகொலையையும், ஈனச் செயல்கள் ஆகியன இவ்வணுகுமுறையால் தீவிரமாகச் சுட்டிக்காட்டப்படும் அனேக உதாரணங்களுள்ளே வரும்.

இவை எல்லாவற்றிலுமிருந்து பின்வரும் ஒரு பொதுவான முடிவுக்கு வரலாம்:

- இன்று அரசுகளுக்கிடையில் மோதுகைக்கான மிக முக்கிய நீண்டகாலக் காரணங்கள் மோசமான பொருளாதார நிலைமைகளாகும்.
- குறிப்பாக மாறுநிலை காலங்களில் அடக்குமுறையான அரசியல் முறைமைகளும் யுத்த சாத்தியமுடையவையாகவே காணப்படும்.
- புதுப்பிக்கப்படக்கூடிய வளங்களின் தரக்குறைவும் (குறிப்பாக மண்ணரிப்பு, காடழிப்பு மற்றும் நீர்ப் பற்றாக்குறை) வன்முறையான மோதுகை நிகழத்தக்க நிலைக்குக் குறிப்பிடத்தக்க முறையில் பங்களிக்கலாம். எனினும், அவை இப்பிரச்சினைக்கு அவ்வளவு மையமானவையல்ல.
- இனவேற்றுமை மட்டும் தனியாக ஆயுத மோதுகைக்கு ஒரு காரணமல்ல. எனினும், ஒரு மோதுகைக்கான தரப்பினர்கள் பெரும்பாலும் அவர்களின் இனக்குழும அடையாளங்களினால் வரையறுக்கப்படுகின்றனர்.

## 4. பின்புல காரணங்களும், முன்நிலை அம்சங்களும்

ஆயுத மோதுகைகளின் காரணங்கள்பற்றிய சமூக விஞ்ஞானக் கோட்பாடுகள் பொதுவான விளக்கத் தத்துவத்தை விருத்திசெய்யும்பொருட்டுப் பின்னணி நிலைமைகளிலும், நீண்ட வீச்சுக் காரணங்களிலும் முக்கிய கவனஞ்செலுத்துகின்றன. எனினும், வேறு ஏதேனும் நியாயமான பொதுக்கருத்துக்கு நாம் கொடுக்கக் கூடிய மதிப்பைவிட பெருமளவு கூடிய மதிப்புடன் இக் கொள்கைகளை நாம் கருத்திலெடுக்கக் கூடாது. அவை பெரும்பாலும் எப்போதும் விதிவிலக்குகளைக் கொண்டதான புள்ளிவிபரவியல்சார்ந்த பொதுக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். எடுத்துக்காட்டாக, வறுமைப்பட்ட அத்துடன் ஜனநாயகப் பண்பற்ற நாடுகள், குறிப்பாக ஆயுத மோதுகை சார்புநிலை கொண்டவையாகும். ஆனால் உலகில் மிக வறியனவாகவும், ஆகக்கூடிய அடக்குமுறையானவையாகவும் இல்லாத நாடுகளில் அநேக ஆயுத மோதுகைகள் காணப்படுகின்றன. அவ்வாறே, மிகக் கடுமையான வறுமையும், அடக்குமுறையும் கொண்ட நாடுகள் உள்ளனவெனினும் அங்கு யுத்தம் இல்லை.

கற்றறி புலமைசார் விடயவிதானத்திலுள்ள ஒரு பிரச்சினை, மோதுகைக்கான ஆகக்கூடிய, முக்கியமான காரணம் எதுவென்ற வினாவிலேயே அது வழமையாகக் கவனஞ்செலுத்துவதாகும். எனினும், பெரும்பாலான விடயங்களில் இது பிரச்சினை நோக்க முறைமையை தவறாக வழிப்படுத்துகின்ற ஒரு முறையாகும். இங்குள்ள வினா எக்காரணம் கொண்டும் ஏனையவற்றைவிட அது அதிமுக்கியமானதென்பதல்ல. மாறாக, வெவ்வேறு காரணங்கள் எவ்வாறு ஊடாடுகின்றன? குறிப்பாக ஆயுத மோதுகையின் பொருளாதார மற்றும் அரசியல் விளக்கங்களுக்கிடையில் தெரிவொன்றைத் திணிப்பதற்கான முயற்சி தவறாக வழிகாட்டப்படுவதாகும். பொருளாதாரக் குறைபாடுகளையும், சூழல் தரக்குறைவினையும் முனைப்பு படுத்திக்காட்டுகின்ற விளக்கங்கள் வாழ்க்கைக்கு அடிப்படையானவற்றை உறுதிப்படுத்துவதற்கான பிரச்சினைகள் எவ்வாறு மக்களை மோதுகைக்கு இட்டுச்செல்ல முடியுமென்று கூறுகின்றன. பெருந்தொகையான மக்கள் ஆயுதமேந்துதல் சட்டநிலைத்தகவுடையதுமட்டுமன்றி, ஒருவேளை வாழ்க்கையின் தேவைகளை உறுதிப்படுத்துவதற்கும் அதுவே ஒரேயொரு வழியென்று நம்புவார்களாயின் வன்முறை மோதுகை இலகுவாகத் தோன்ற முடியும். வேறு வகையில் கூறுவதாயின், அவர்கள் தாம் ஒரு நீதியற்ற நிலையில் இருப்பதாக உணர்கிறார்கள். எனவே அந்த நிலைமையினை சீர்செய்யவேண்டுமென்றும் எண்ணுகின்றனர். எனினும், பெருந்தொகையான மக்கள் தாமாகவே அத்தகைய தீர்மானங்களை எடுப்பதில்லை. தலைவர்கள் அவர்களின் இதயங்களையும், உள்ளங்களையும், அவ்வாறே அவர்களின் விசுவாசத்தையும், அர்ப்பணிப்புக் கடப்பாட்டையும் வெற்று யுத்தத்துக்கு அவர்களை இணங்கவைத்து வற்புறுத்துவதனால் அவர்கள் அரசியல்ரீதியாக அணிதிரள்கின்றனர். எனவே வன்முறை மோதுகையும், அதன் அதிகரிப்பும் குறைவும் பற்றிய பயனுள்ள பகுப்பாய்வெதுவும் அரசியல் பரிமாணத்தைப் புறக்கணிக்கமுடியாது.



இது தொடர்பிலான பகுப்பாய்வுப் பிரச்சினைகளில் ஒன்று அரசியல் கொள்கைக்கும், அரசியல் நடைமுறைக்கும் இடையிலான ஒவ்வாமைகளில் தங்கியுள்ளது. கொள்கை நீண்டகால நிலைமைகளிலும், பொதுவான விளக்கங்களிலும் கவனத்தை ஒருமுகப்படுத்தும் போக்குடைய அகண்டதன்மையை இலக்காகக்கொள்வதன்மூலம் துல்லியத்தை இழந்துவிடுகின்றது (லெவி1989 ப. 297). பெருங் காட்சியில் அரசியல் நடத்தையின் விபரங்கள் தொலைந்துபோகக்கூடும் ஒப்பீட்டடிப்படையில் அரசியல் தலைவர்கள் பெரும்பாலும் ஆரவாரமான உபாயங்கள், தொலைநோக்குகளை வலியுறுத்தும் மனப்போக்குடையவர்களாக இருந்தபோதிலும், இறுதியில் அவர்களின் உய்வுக்கு விவரங்களைக் கையாள்வதற்கான அவர்களின் ஆற்றலியே தங்கியுள்ளனர். சமூக விஞ்ஞானக் கொள்கைகள் நீண்ட தொலைநோக்கினை மேற்கொள்கின்றன. ஆனால், அரசியலில் குறுங்கால நோக்கே மேலோங்கி நிற்கின்றது. எனவே ஆயுதம் தாங்கிய மோதுகையை அகண்ட பூகோள நிலைப்பட்ட ஒரு நிகழ்வாக பார்ப்பதென்பது

பருநிலைப்பட்ட சமூக-பொருளாதார அமைவினை பார்க்க வேண்டுவது அவசியமாகும். ஆனால், அதேவேளையில் தனியொரு மோதுகையை நோக்குவதென்பது சொரப்பாக அரசியல் பற்றியம் அதில் இடம்பெறும் நிறுவனங்களையும், தனியார்களையும் பற்றிய ஒரு தேடலாக அமையும்.

ஒருபுறத்தில் பரந்தகன்ற கொள்கைரீதியிலான பொதுமைப்படுத்தல்களும், மறுபுறத்தில் விபரமான பகுப்பாய்வுகளும் என்று இருவெவ்வேறு மட்டங்கள் முழுமையாகத் தனித்தனியே பார்க்கப்படுவதற்கு இடமளிக்காமல் அவற்றை இணைப்பதற்கான வழிகளைத் தேடுதல் கூடிய பயனளிப்பதாயிருக்கும். அவ்வாறு செய்தால் மட்டுமே பரந்தகன்ற பொதுமைப்படுத்தல்கள் பகுப்பாய்வாளருக்கு எந்த விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பதிலும், ஆகக்கூடிய ஆபத்துக்களை எங்கு கண்டறிய வேண்டும் வழிகாட்டலை வழங்கும்.

அத்தகைய ஓர் அணுகுமுறை மேற்கொள்ளப்படுமாயின், சமயாசமய விளக்கங்கள் சமூக, பண்பாட்டு, பொருளாதார மற்றும் சூழல் பின்னணிகளை பிரதிபலிக்கவேண்டியிருக்குமென்பது மட்டுமன்றி, அரசியல் முன்னிலைப்பாட்டையுயும் எடுத்துக் காட்டல்வேண்டும். வேறுவகையில் கூறுவதாயின், நீண்டகாலக் கட்டமைப்புச் சார்ந்த விளக்கங்களுக்கு மேலதிகமாக, நாம் அரசியலையும் கருத்தில் கொள்ளவேண்டும். "போர் என்பது நமது பகைவன் நாம் விரும்புவதை செய்ய வேண்டும் என நிர்ப்பந்திப்பதுவும்" "அதே கொள்நெறியை வேறு வழிமுறைகளால் நடத்தி செல்வதுவும்" ஆகும் என புகழ்பூத்த பிரஸ்ஸிய படையியல் தத்துவஞானி குளோஸ்விற்ஸ் (1832 / 1976) கூறியுள்ளார். யுத்தம் பற்றிய அத்தகைய ஒரு வரைவிலக்கணம் மக்கள் ஏன், எவ்வாறு யுத்தத்துக்குச் செல்கின்றார்களென்பது குறித்த பண்பாட்டு நிலைப்பட்ட விடயங்களைப் புறக்கணிப்பதனால் அது தவறாக வழிகாட்டுகின்றதெனக் கீகன் (1994, ப. 3-12) வாதிடுகின்றார். போருக்கான காரணங்கள் பற்றி ஆராய்வதற்கு கிளோஸ்விற்ஸிற்கு மேலாண்மை இடமளித்தல் என்பது திட்டவட்டமான ஒரு தவறாகும், எனினும் பின்னணிக் காரணிகள் அரசியலின் ஊடாக மட்டும்தான் ஆயுத மோதுகையின் திசையில் நிகழ்வுகளைத் திருப்பிவிடுகின்றன. போர்கள் பிரக்ஞை பூர்வமானவை, பிரக்ஞை பூர்வமாக தீர்மானிக்கப்படுபவை. அவற்றின் போருக்கான காரணங்கள் பற்றிய விளக்கமானது அவை பற்றிய பின்புலத்தையும் முன்னிலை தொழிற்பாடுகளையும் உள்ளடக்குவதாகுவும். அத்துடன் அதன் அமைவியல் அம்சங்களையும், அரசியல் நிலை ஆற்றுகையாளர்கள் தீர்மானம் மேற்கொள்ளும் முறைமையையும் விளக்குவதாக அமைதல் வேண்டும். அமைகின்ற காரணிகள் ஆகிய இரண்டையும் தழுவியதாக இருக்க வேண்டும். சுருங்கச்சொல்வதாயின் ஆயுத மோதுகைகளின் காரணங்கள் பற்றிய யாவற்றையும் உள்ளடக்குவதான விளக்கமானது மேற்சொன்ன இரண்டு அம்சங்களையும் இணைத்து உள்ளடக்குவதாக அமைதல் வேண்டும்.



## 5. முறையியலும் வகையியலும்

டெஸ்லர் (1994) அத்தகையதொரு பல்மட்டப் பகுப்பாய்வுக்கு ஒரு நல்ல செயலாற்றுவரம்பினை வழங்குகின்றார். ஆயுத மோதுகைக்களுக்கான வாய்ப்புள்ள காரணங்களின் பன்மடங்குத்தன்மையில் அவர் வெறுமனே வெவ்வேறு காரணங்களைமட்டுமன்றி, காரணங்களின் வெவ்வேறு வகைகளையும் காண்பதுடன் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான நான்கு பாகங்களைக்கொண்ட விளக்க முறையினை முன்வைக்கின்றார். சொற்பிரயோகத்திலும் உள்ளடக்கத்திலும் சிறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு அந்த நான்கு அம்சங்களையும் பின்வருமாறு கூறலாம்:

- **பின்புலக் காரணங்கள்** (டெஸ்லரின் ஆய்வில் செல்வழிகள், 1994) "தனிப்பட்ட மட்டத்தை விட, குழுவின் மட்டத்தில் காணப்படும் அரசியல், சமூக, பொருளாதார அல்லது தேசிய நிலைப்பட்ட மாறுபாட்டு நிலைகள்" என்பவையே அடிப்படைக் கூறுகளாகும். இவை அதிகாரத்திலிருந்து சில குழுக்கள் விலக்கப்படுவதன்மூலம், மற்றவர்களுக்குத் திட்டமிட்டமுறையில் ஆதரவு காட்டுவதன்

மூலம் அல்லது பிராந்தியப் பொருளாதார வேறுபாடுகள்மூலம் உருவாக்கப்படலாம். சுருக்கமாக, இங்கு கூறப்படுவன சமூக மற்றும் அரசியற் கட்டமைப்பின் அடிப்படை ஆக்கக்கூறுகளேயாகும். அவற்றை ஆராய்வதென்பது மோதுகையின் பின்னணிக் காரணங்களையும், உள்ளார்ந்த நிலைமைகளையும் ஆராய்வதாகும்.

- **அணி திரட்டல் உபாயங்கள்** (டெஸ்லரின் ஆய்வில் இலக்குகள் 1994) என்பவை, முக்கிய அரசியற் செயற்பாட்டாளர்களின் குறிக்கோள்கள் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கு அவர்கள் செயற்படுகின்ற முறை (இது டெஸ்லரின் தொனிப்பொருள்மீதான எனது நுண்மாறுபாடு) ஆகிய இரண்டையும் உள்ளடக்கும். வேறுவகையில் கூறுவதாயின், அணி திரட்டல் உபாயத்தை நாம் பகுப்பாய்வு செய்கின்றபோது நாம் அரசியல் நடத்தையின் முழு வீச்சையும்-விடயங்கள் எவ்வாறு எண்ணக்கருநிலைப்படுத்தப்படுகின்றன, அவை எவ்வாறு முன்வைக்கப்படுகின்றன என்ற இரண்டையும் பரிசீலனை செய்கின்றோம். எனவே மக்கள் எக்காரணங்களுக்காகப் பேராடுகின்றார்களென்பதை நாம் பார்ப்பதுடன், அந்தக் காரணங்களை அவர்கள் எவ்வாறு விளங்கிக்கொள்கின்றார்கள் என்பதையும் எண்ணிப்பார்க்கின்றோம்.

- **உந்து விசைகள்** எனப்படுபவை ஆயுதம் தாங்கிய மோதுகை தொடங்கப்பெறும் சரியான நேரத்தை கூறுவனவாகும். அவை மோதுகைக்கான காரணத்தை தராது அது ஏன் குறிப்பிட்ட ஒரு வேளையில் தொடங்கியதென்பதை காட்டும். இவை முக்கியமான ஆற்றுகையாளர்களால் மேற்கொள்ளப்படும்நடவடிகடகைகள், செய்கைகள் ஆகும். இச்செய்கைகள் இதில் ஈடுபட்டுள்ளவர்களின் தெரிவுகளை மட்டுப்படுத்துவதாக அமையும். வன்முறை செயற்பாடுகளை அதிக கவர்ச்சி உடையனவாகவும் சமாதான அணுகுமுறைகளை மிகக்குறைந்த ஈர்ப்பு உடையனவாகவும் காட்டும்.



- **தூண்டிகள்** மோதுகையின் செறிவினையும் காலநீட்சியையும் பாதிப்பவையாகும். அவை எதிர்த்து நிற்கின்ற தரப்புகளுக்கிடையிலான இராணுவச் சமநிலை போன்ற அககாரணிகளாக அல்லது, ஐ.நா. தலையீடுபோன்ற புறக்காரணிகளாக இருக்கலாம். இவை உத்திகளையும் (எடுத்துக்காட்டாக, கிளர்ச்சியாளர்கள் சிவிலியன் பிரதேசங்களைத் தாக்குவதிலிருந்து தவிர்ப்பதாகவேனும்) அன்றேல் சம்பந்தப்பட்ட நிலம் , பருவகாலங்கள் மற்றும் சீதோஸ்ண நிலைபோன்ற இயற்கை நிகழ்வுகளை உள்ளடக்கலாம். அவை படைக்கான ஆயுதங்கள் கிடைப்பது போன்ற பருப்பொருள் விடயங்களாக இருக்கலாம். அன்றேல் அதிலும் பார்க்க திட்பத்தன்மை குறைவான அம்சங்களாக ஆனால் முக்கியத்துவம் குறையாதவையாக, உதாரணமாக பண்பாட்டு அம்சங்கள் பற்றியன போன்றவையாக இருக்கலாம்.

இது பின்புல காரணிகளில் இருந்து சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்கள் பற்றிய கவனத்தை ஈர்ப்பதாகவோ இன்றேல் அல்லது மீண்டும் பின்புல காரணிகளுக்கே செல்வதை குறிக்கலாம். இது உண்மையில் தோற்றுகைக்கான ஒரு கொள்கையினை தராது. ஆனால் அந்தக் கொள்கையினை ஒழுங்குபடுத்துவதான ஒரு முறையேயாகும். அத்துடன் இவை நாம் ஆராய வேண்டிய ஆய்வு மேற்கொள்வதற்கான கோணங்களை எடுத்துக்கூறுவனவாகவும், தனிப்பட்ட மோதுகைகள் யுத்தங்களாக மாறுவதற்கான காரணங்களை அறிந்து அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளை எடுத்து கூறுவனவாகவும் அமைதல் வேண்டும். உண்மையில் போர் நிலைக்கு உக்கிரப்படுத்துபவன ஒவ்வொன்றையும் தனித் தனியே ஆராய்ந்து அவற்றுக்கான காரண காரியங்களை தெளிவுபடுத்துவதாக இருத்தல் வேண்டும். இந்த விடயத்தில் முதலிரண்டு அம்சங்களுமே- அதாவது பின்புல காரணங்கள், அணிதிரட்டுவதற்கானஉபாயங்கள் ஆகிய இரண்டையும் பற்றியே எடுத்துக் கூறுவதாக அமைதல் வேண்டும். வன்முறையை எவ்வாறு முடிவுக்குக்கொண்டு வருவதென்பதற்கு அடுத்த வகைத் தூண்டி முக்கியமானதாகும்.

## 6. அநீதியும், அணிதிரட்டலும்

நீண்டகாலக் காரணங்களும் குறுகியகாலக் காரணங்களும் ஊடறுக்கின்ற கட்டத்தையும், அரசியற் செயற்பாட்டாளர்கள் கட்டமைப்புச்சார்ந்த, பின்னணி விடயங்களில் கவனஞ்செலுத்துகின்ற கட்டத்தையும் ஒன்றுசேரக் காட்டுகின்ற இரு எண்ணக்கருக்கள் உள்ளன. அவ்வெண்ணக்கருக்கள் நீதியும், அணிதிரட்டலுமாகும்.

மோசமான பொருளாதார நிலைமைகளினதும், அரசியல் நல்வாய்ப்புகள் இல்லாமையினதும் சேர்க்கை ஓர் இரட்டை அநீதியாகச் செயற்படுகின்றது. அரசியல் அணிதிரட்டல் அநீதியென்ற விடயப்பொருளைச்சுற்றி இடம்பெறுகின்றது. மக்கள் ஓர் இலட்சியம் நீதியானதென நம்புவதனால் அல்லது அது தமது சொந்த வாழ்க்கையில் காண்கின்ற அநீதிக்கு நிவாரணம் அளிக்குமென்று அவர்கள் கருதுவதால் அக்காரணத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து விடுகின்றனர். எனவே ஒரு சமூகத்தில் அல்லது வெவ்வேறு நாடுகளுக்கிடையில் அதிகாரத்திலும், சுபீட்சத்திலும் அடிப்படையாகக் காணப்படும் வேற்றுமைகளிலிருந்து எழுகின்றதும், சுயநலத்துக்காகப் பயன்படுத்தக் கூடியதுமான அநீதியிழைக்கப்பட்டதென்ற ஓர் உணர்வுதான் அரசியல் அணிதிரட்டலுக்கு அடிப்படை மூலமாயுள்ளது.

இவ்வாய்வுரையின் இக்கட்டத்தில் சில கவனமான வேறுபடுத்தல்களைச் செய்யவேண்டியுள்ளது. இங்கு முன்வைக்கப்படும் வாதம், உதாரணத்துக்கு, சேர்பியர்களின் நெருக்கடி நிலை பற்றியெழுந்த தீவிரமான அநீதி உணர்வினால் யூகோசிலாவியத் தலைவரான சுலோபொடன் மிலொசொவிக் செயற்பட்டுள்ளார் என்பதல்ல. மாறாக, அவர் பிரதானமாகத் தமது சொந்த அதிகாரத்தையும், அவரின் தலைமைத்துவத்தைச்சுற்றி ஒட்டிக்கொண்டிருந்த ஒரு நெருக்கமான குழுவினரின் அதிகாரத்தையும் நீடித்திருக்கச் செய்வதில் அக்கறை கொண்டிருந்தார் என்பதுதான் உண்மையாகும். (லிட்டில் மற்றும் சல்பர் 1995 ஜூடா 1997 1999) ஆனால் மிலொசொவிக்கின் வெற்று ஆரவாரப்பேச்சு சேர்பியர்கள் அனுபவிக்கின்ற அநீதி பற்றிய முறைப்பாடுகளினால் பொங்கி வழிகின்றது. 1987 முதற் கொண்டு அவர் சேர்பியர்களின் மனக்குறைகள் பற்றிக் கிரமமாகத் திரும்பத் திரும்ப பேசினார். அவர்தாமே அநீதியை உணர்ந்தாரோ இல்லையோ இவ்வெண்ணக்கருவை எவ்வாறு தமக்குச் சாதமாகப் பயன்படுத்துவதென்று அறிந்திருந்தார். அவரது அரசியல் வாழ்க்கைத் தொழிலின் இந்த அம்சத்தில் அவர் ஒரு முன்மாதிரி யாவார். சுயநலத்துக்காகப் பயன்படுத்தக்கூடியதாயிருந்த அநீதி உணர்வை அவர் இலாவகமாகக் கையாண்டார். 145

ஆயுத மோதுகையில் செயல் தூண்டும் ஒரு காரணியாக நீதியென்ற இக்கருத்துக்கு "மனக்குறையின் உரத்த சொல்லாடலல்ல, ஆனால் பேராசையின் மௌனமான சக்தி" என்று வலியுறுத்துவதன்மூலம் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது(கொலியர் 1999). பகுதியளவில் இவ்வாதம் மொழிக்கும், சொல்லாடலுக்கும் எந்தளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பதைச் சுற்றியுள்ளது. இதில் முக்கிய முறையியல் சார்ந்த விடயம், ஆராய்ச்சி நோக்கங்களுக்காக "நீதிக்கான கோரிக்கை மனக்குறையைத் தோற்றுவிக்கின்ற சூழ்நிலைகளாக மீள வகுத்தமைக்கப்படலாம் என்ற வாதமாகும்" (கொலியர் மற்றும் ஹோ.ஃ. பிலர் 1999 ப. 5) எனினும் அகநிலைக்குரிய கோரிக்கையை புறநோக்குடைய சூழ்நிலைகளாக மீள வகுத்தமைத்தல் தவறான எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது. ஏனெனில் திட்பநுட்ப கோரிக்கையிலே அணிதிரட்டலும், புலனுணர்வும் தங்கியுள்ளன. எனினும் ஓரளவுக்கு, பேராசை எதிராக மனக்குறை என்ற வாதத்தை யாருடைய பேராசை யாருடைய மனக்குறை என்று கேட்பதன் மூலம் சுருக்கிக் கூறலாமென்பதுடன், முறையான கண்ணோட்டத்தில் பார்க்கவும்படலாம். அதாவது உதாரணத்துக்கு மிலொசெவிக் அதிகாரப் பேராசை கொண்டவர் என்பது தன்னளவில் சாதாரண சேர்பியர்களுக்கு எவ்வித மனக்குறையும் இல்லை என்ற கருத்தாகாது. வேறுவகையில் கூறுவதாயின் விளக்கமளிக்கின்ற மாறிகளாக பேராசைக்கும், மனக்குறைக்கும் இடையில் தெரிவைச் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. மாறாக இவை அரசியல் அணி திரட்டலில் ஒன்றையொன்று முழு நிறைவாக்குகின்றனவும், பரஸ்பரம் வலுவூட்டுகின்றனவுமான ஆக்கக்கூறுகளாக இருக்கலாம்.

## 7. இனக்குழும நிலையும், மோதுகையும்

மேற்படி விடயப்பொருள்களை விளக்கிக்காட்டுவதற்கும், பகுப்பாய்வுக்கான அவற்றின் தாற்பரியங்களை ஆராய்வதற்கும் புலமைசான்ற விடயவிதானத்திலும் கூடிய பிரபலமான விளக்கவுரைகளிலும் இன முரண்பாடுகள் என்று குறிப்பிடப்படும் வகுதியை மிக நுணுக்கமாகப் பார்த்தல் பயனுடையதாயிருக்கும். இது பொதுவாக, சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் இனரீதியாக வேறுபட்டவர்கள் மட்டுமன்றி, அத்தகைய இன வேறுபாடுதான் மோதுகைக்கு மையமாக உள்ளதென்றும் விளங்கிக்கொள்ளப்படுகின்றது. இது குறைந்தபட்சம் ஒரு தரப்பினரை சுட்டிக் காட்டுவது மாத்திரமல்லாமல் இனக்குழும வேறுபாட்டை மோதுகைக்கான ஒரு காரணமாகவும்(அதுவே முற்றுமுழுதான காரணமாகவும் இருக்கலாம்) எடுத்துக் கூறும்.

இனக்குழும வேறுபாட்டுக்கான வரைவிலக்கணம் மிகக் கடினமான ஒன்றாகும்: இதுதான் அதுவென குறிப்பிட்டு கூறுவது பெரும் சிக்கல்கள் நிறைந்த பல சிரமங்களை ஏற்படுத்துவதாகும். இனக்குழும வேறுபாடு ஒன்றுக்கொன்று வேறுபட்ட பல்வேறு அம்சங்களை கொண்டு சுட்டப்பெறுவதால் அது பற்றிய பொதுப்படையான கூற்று சிரமம் தருவது மாத்திரமல்ல தவறான வழிகளில் இட்டுச்செல்லவும் முடியும். பல்வேறுபட்ட நிலைகளில் சமுதாயங்கள் தங்களை மொழி,தோலின் நிறம், மதம், வாழிடம் மற்றும் வரலாறு போன்ற அடையாள குறியீடுகளின் இணைவைக் கொண்டு இனக்குழுமமென ஒற்றுமைப்பட்ட ஒன்றாக கருதிக்கொள்கின்றன. ஒரு குறிப்பிட்ட இனக்குழும அடையாளத்தை நிர்ணயிப்பதில் தீர்மானிக்கும் சக்தியாக கொள்ளப்படுவது, பிரிநிலைப்பட்ட வரலாற்று அனுபவமோ, ஐதீகங்களோ அன்றேல் சமய நம்பிக்கைகளோ அன்று. ஒரு குழுமத்தினை இன்னொன்றிலிருந்து பிரித்துக்காட்டி அது இக்குழுமத்திற்கு உரியதென ஒட்டுமொத்தமாக பகிர்ந்து கொள்ளப்படும் புலப்பதிவே தீர்மானிப்பு பலம் உடையதாக காணப்படும். இவ்வாறாக பகிர்ந்து கொள்ளப்படும் புலப்பதிவு இரு காரணிகளினால் வளர்வூக்கம் பெறலாம். அவையாவன ஒன்று மற்றைய குழுமங்களோடு ஒப்பு நோக்கும் போது பாரபட்சத்திற்கு ஆளக்கப்பெற்ற அனுபவங்கள், இரண்டு குழுமத்துக்கு வேண்டியதென கருதப்படும் நலன்களுக்காக மேற்கொள்ளப்படும் அரசியல் அணிதிரட்டுகை என்பனவாகும்.



1990 களில் நடந்த பால்கன் மோதுகைகளின்போது வெளியக வல்லரசுகளின் இராஜதந்திரிகளும், அரசியல்வாதிகளும், கண்டிப்பான இராஜதந்திரத்தின் மூலம் இலகுவாக வழிக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு பிரச்சினையாக, ஒருசிலர் ஒன்றாக சேர்ந்து பணியாற்றக்கூடிய ஒரு சாதாரண விடயமாக அதனைக் கருதத்தொடங்கினர்(லிட்டில் மற்றும் சில்பர் 1995 ப.159). வெறுமனே பொறுப்பில்லா தன்மையை விட வேறெந்த ஆழமான அடிப்படைக் காரணம் எதுவும் இல்லையென்பதுபோலத் தோன்றியது. இது ஒரு தவறான கருத்து என்பது மெய்பிக்கப்பட்ட போது ஆழமான காரணங்களைத் தேடியபோதிலும் அவை கூடிய திருத்தமாக மேற்கொள்ளப்படவில்லை. ஐக்கிய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் வாரன் கிறிஸ் தோபர், பொஸ்னியா-ஹெர்சி கொவினாவில் யுத்தம் “புராதன இனக்குரோதங்களினால்” ஏற்பட்டதெனத் தெரிவித்தார் (கல்ஹவுன் 1997, ப.61). பால்கன்ஸ் பழியை பால்கன் மக்களின் கொதித்தெழுகின்ற இயல்பின் மீது சுமத்துகின்ற பொதுவான கருத்தை போல்கன்ஸ் சர்வதேச ஆணைக்குழு குறிப்பிட்டதுடன் அதனைக் கண்டிக்கவும் செய்தது. அத்தகைய வாதங்கள் (எனினும் இன மோதுகை என்ற பதப் பிரயோகத்தில் எப்போதும் இல்லாமல்) அத்தகைய மோதுகைகளைத் தீர்ப்பதற்கு அல்லது அத்தகைய மக்களுக்கு உதவுவதற்குப் பெரிதாக எதையும் செய்ய முடியாததென்பதை மறைமுகமாக உணர்த்துகின்றன.

இவ்வகையான வாதம் இன மோதுகைகள் என்று கூறப்படுகின்ற கோட்பாட்டைப் பரிந்துரைப்பவர்களால் பயன்படுத்தப்படும் அதே நியதிகளைப் பயன்படுத்துவதுடன், சிலசமயங்களில் அதே முடிவுகளுக்கும் வருகின்றது. எடுத்துக்காட்டாக, கோப்மன் (1996), குடிசனங்களை வலுக்கட்டாயமாகப் பிரித்து வைப்பதன் மூலம் மட்டும்தான் இனச் சிவில் யுத்தங்களை முடிவுக்குக் கொண்டு வரலாமென

முடிவு செய்கின்றார். வேறுவகையில் இது இனச்சுத்திகரிப்பு என அழைக்கப்படுவதுடன், இனச்சுத்திகரிப்பாளர்கள் தாமே எண்ணிக்கொள்கின்றவாறு எவரும் ஒரு கலப்புத் திருமணத்துக்கான சாத்தியப்பாடு இல்லையென்று கொள்வது போல, ஒவ்வொருவரும் ஒன்றில் ஒரு குழுவை(எ.கா செர்ப்) அன்றேல் வேறொரு குழுவை (எ.கா பொஸ்னிய) சேர்ந்தவரென்று ஊகிப்பதாகவும் தோன்றுகிறது.

மோதுகைகளின் காரணங்களை இவ்வாறுல் காட்டுவதனால் ஏற்படும் தார்மீகப் பிரச்சினைகள் ஒரு புறமிருக்க, அதன் ஆய்வறிவுக் குறைபாடுகள், மேலே கோடிட்டுக்காட்டிய பல்வேறு வகைநிலைப்பட்ட கருத்து நிலைகளைப் பகுப்பாய்வாளர்கள் பயன்படுத்துகின்றபோது மிகச் சிறந்த முறையில் தெரியவருகின்றன. பால்கன்ஸ் யுத்தங்கள் பற்றிய புராதனக் குரோதங்களும், கொதித்தெழுகின்ற இயல்பும் தொடர்பான விளக்கங்கள் நிகழ்காலம் பற்றிய மூன்று தவறுகளை (அத்துடன் கடந்த காலம் தொடர்பில் மேலும் அனேகமானவற்றை) ஏற்படுத்துகின்றன. அவர்கள் இனக்குழுமத்தை முற்றுமுழுதான ஒரு பின்னணிக் காரணியாக விளங்கிக்கொள்கின்றனர். அவை அது ஒன்றேதான் பின்னணிக் காரணியென விளங்கிக்கொள்வதுடன் வேறு எவ்வகையான காரணத்தினதும் பாத்திரத்தினைக் கருத்தில் கொள்வதற்கும் தவறிவிடுகின்றன. விசேடமாகக் குறிப்பிடத்தக்கது, அவை அணி திரட்டல் உத்தியை முழுமையாகப் புறக்கணிக்கின்றனவென்ற உண்மையாகும்.

இன வேறுபாடானது அடிப்படையாயுள்ள சமூகப் பிரிவினைகளில் ஒன்றாகவும், அதனால் ஒரு பின்னணிக் காரணமாகவும் கருதப்படுவதில் இத்தவறு தங்கியிருக்கவில்லை. மாறாக, அடிப்படையாயுள்ள அப்பிரிவினை எவ்வாறு யுத்தத்துக்கான நிலைமைகளை உருவாக்கமுடியுமென்ற கேள்வி புறக்கணிக்கப்படுவதில்தான் அது தங்கியுள்ளது. இனவேறுபாடு மோதுகைகளில் பெரும்பாலும் சிக்குண்டுள்ளதென்றும், அதனால் அடிக்கடி பாதிக்கப்படுகின்ற தனிப்பட்டவர்கள், அவர்கள் எதிர்த்துப் போராடுகின்ற அடிப்படைப் பிரச்சினை உண்மையில் இனத்குழும வேறுபாடென்று நம்புகின்றனரென்றும் எண்ணற்ற விடய ஆய்வுகள் தெளிவுபடுத்தியுள்ளன. இது முக்கியமானதென்றபோதிலும் போதுமானதல்ல. ஏனெனில், ஏற்கெனவே நாம் குறிப்பிட்டவாறு, உலகில் ஆகக்கூடிய இன வேறுபாடுகளைக் கொண்ட நாடுகள் வன்முறையான மோதுகைக்கு சார்பு நிலையானவை அல்ல. இனக்குழும உணர்வினால் பிரிக்கப்பட்ட தரப்பினர்கள் சம்பந்தப்பட்ட ஆயுத மோதுகைகளின் விடயங்களில் இனக்குழும உணர்வினால் மட்டும் நோக்குவதன் ஊடாக, நிலைமையை நாம் பகுப்பாய்வுசெய்ய முடியாதென்பதை இது மறை முகமாகக் குறிப்பிடுகின்றது. மேலே எடுத்துக்காட்டிய அளவுசார்ந்த ஆராய்ச்சியின் பெறுபேறுகள் பெருளாதார நிலைமைகளினதும், அரசியல் முறைமையினதும் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. எனவே இனத்துவத்துக்கு அப்பாலுள்ள ஏனைய பின்னணிக் காரணிகளை ஆராய்தல் அர்த்தமுள்ளதாயிருக்கும்.

கவனத்தை ஒருமுகப்படுத்துவதில் இரண்டாவது மாற்றம் அரசியல் அணி திரட்டலை நோக்குதலாகும். இனத்துவம் குழு அடையாளத்தின் ஒரு மைய ஆக்கக் கூறாக மிகப்பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இருப்பதனால், பொதுவான எதிர்ச்சாய்வுக்கான பலமிக்க ஓர் ஆக்கக்கூறாகவும் அது உள்ளது. அவ்வகையில், குறிப்பாக ஒரு சமூகம் பெரும் சமூக-பொருளாதார மாற்றத்துக்கு உட்படுகின்றபோது, குடிசனத்தை அணிதிரட்ட முனைகின்ற அரசியல் தலைவர்களால் அது இலகுவாக சூழ்ச்சித்திறனுடன் கையாளப்படலாம். அத்தகைய நேரங்களில்தான் தேசியவாத அரசியல் முன்னிலைப்பங்கு வகிக்கின்றது.

தேசியவாதம், தேசிய இனங்களும், அரசுகளும் ஆட்புலரீதியாக முழுமையாக ஒத்திருக்க வேண்டுமென்று கோருகின்ற ஓர் அரசியல் சித்தாந்தம் ஆகும். (ஜெல்னர் 1983, ப.1) ஆனால் அது அதனை விடக்கூடியது. அதனை, சமூக-பொருளாதார மற்றும் அரசியல் உறுதி நிலைக்குலைவின் காரணமான ஒரு சிக்கலான சமூக, பண்பாட்டு, அறிவார்ந்த மற்றும் உணர்ச்சிகரமான எதிர்த்தாக்கமெனக் கருதலாம்(பிளமனற்ஸ், 1976). அத்தகைய உறுதிநிலைக்குலைவு, நவீனத்துவத்தின் தாக்கம் (சிமித்

1983), காலனித்துவ ஆட்சி விதிப்பு (அன்டர்சன், 1991 செரன்-வற்சன் 1997) அல்லது அரச சோஷலிஸத்தின் வீழ்ச்சி (சிமித் மற்றும் ஒஸ்ரறுட் 1995) என்ற ஏதேனும் ஒரு வடிவில் வரலாம். உலகமயமாக்கல் என்ற செயல்முறையின் பின்னாலுள்ள உந்துசக்தியான தனியோர் உலகச் சந்தையின் உருவாக்கம் உறுதி நிலையைக் குலைக்கின்ற ஒத்ததொரு தாக்கத்தைக் கொண்டுள்ளதென வாதிட முடியும். பேரினத்துவ வாதத்தின் மீதும், தேசியவாதத்தின் மீதும் உலகமயமாக்கலின் விளைவு இருமுக உணர்ச்சிப்போக்குடையதாகும். ஒரு புறத்தில் அது பண்பாடுகளையும், வாழ்க்கைப் பாங்குகளையும் ஓரினத்தன்மை கொண்டதாகச் செய்து, கூடிய உலகப் பொதுப் பதற்றநிலை தொடர்பான விழிப்புணர்வை ஊக்குவிக்கின்றது. மறுபுறத்தில் முதலீட்டு மூலதனம் துரிதமாக வேறிடம் கொண்டு செல்லப்படுதலும், உலகெங்குமுள்ள சந்தைகளின் ஒருங்கிணைப்பும் புதிய வெற்றியாளர்களையும், தோல்வியாளர்களையும் உருவாக்குகின்றது. இது சில இனக்குழுமங்களும், தேசியக் குழுமங்களும் கூறுபடுவதற்கும், ஓரங்கட்டப்படுவதற்கும், பண்பாட்டு ஓரினத்தன்மைக் கெதிரான எதிர்விளைவுக்கும் வழிவகுக்கக்கூடும்.

இப்பெரும் குருட்டுத்தன்மையான வரலாற்றுச் செயல் முறைகள், கட்டவிழ்த்துவிடக்கூடிய சமூக உறுதிநிலைக்குலைவு ஆகியன ஒரு நாட்டின் சமூக மற்றும் அரசியல் உயர்குடியினரின் வெவ்வேறு பிரிவுகளுக்கிடையில் தீவிரமான அதிகாரப்போட்டிகளுக்கான நிலைமைகளை மட்டும் உருவாக்குவதில்லை. அது பெருந்தொகையான சாதாரண மக்களைக் கடுமையான பாதுகாப்பின்மை மற்றும் ஐயப்பாட்டு நிலைமைக்கும் தள்ளிவிடக்கூடும். தனிப்பட்டவர்களின் வாழ்கையில் அத்தகைய வரலாற்று மாற்றங்களின் தாக்கம் விதிக்கட்டற்றதும், பெரும்பாலும் பாழாக்குவதுமாக இருப்பது புரிந்துகொள்ளக் கஷ்டமானதாகும். அத்தகைய ஒரு நேரத்தில் குழும அடையாளத்தை வற்புறுத்துவது அனேக சாதாரண மக்களுக்குக் கவர்ச்சியளிப்பதாக இருக்கும். நடப்பதிலிருந்து ஏதேனும் ஒருவகையான அர்த்தத்தைக் காண்பதற்கு அந்த ஒன்று மட்டும்தான் அவர்களுக்கு உதவக்கூடுமாயிருக்கும். எனவே அத்தகைய பெரிய அளவிலான மாற்றத்திலிருந்தும் உறுதிநிலைக்குலைவிலிருந்தும் எழுகின்ற ஒரு மோதுகையில் எவ்விடயங்கள் போராட்டநிலையில் இருந்தாலும், அரசியல் தலைவர்கள் தமது நிலைப்பாட்டைத் தேசிய அடையாளத்துக்கும், பெருமிதத்துக்கும், நீதிக்குமான ஒரு போராட்டமாக முன்வைக்க முடியுமாயின் அவர்களின் தொகுதி மக்களைப் பெரும்பாலும் வெற்றிகரமாக அணிதிரட்டக்கூடியவர்களாயிருப்பர்.

இவ்வாதங்களை நாம் பின்வருமாறு சுருக்கிக்கூறலாம், ஆயுத மோதுகையின் ஒரு காரணம் இன வேற்றுமையல்ல, மாறாக இனக்குழும அரசியல்தான். இனக்குழும வேறுபாடுகளை அரசியல் விசுவாசங்களினுள் உட்புகுத்துதலும், இனக்குழும அடையாளங்களை அரசியல் மயமாக்கலும் தான் மிகவும் ஆபத்தானது.

முன்னைய யூகோசிலாவியா பிளவுபட்டதை விளக்குகின்றபோது, யூகோசிலாவியா ஒரு பல்லின அரசாக இருந்ததைமட்டுமன்றி 100 ஆண்டுகளுக்கு மேலாக அவ்வரசு இனக்குழும தேசியவாத வரலாற்றை மீட்டிக் கொண்டிருந்ததென்பதையும் குறித்துக் கொள்ளவேண்டியது முக்கியமானதாகும். இனக்குழுமம் நீண்டகாலமாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதுடன், 1945 முதல் 1980 வரையிலான டிட்டோவின் ஆட்சிக்காலமும் அதற்கு விதிவிலக்கல்ல. யூகோசிலாவிய சோசலிச சமஷ்டிக் குடியரசின் ஐக்கியத்துக்கு அச்சுறுத்தலாயிருக்கக் கூடிய வகையிலான தேசியவாத அரசியலை டிட்டோ வெடிக்காதவாறு அடக்கிய அதேவேளையில், அவர் அரசியலமைப்பு மற்றும் அரசியல் அதிகாரத்தை ஓர் இனக்குழும தேசிய அடிப்படையில் பகிர்ந்தளித்தார். இதுவே அரசினதும், கட்சியினதும் உறுப்புகளான ஆறு குடியரசுகளுக்கும், இரு மாகாணங்களுக்கும் இடையில் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் ஏற்படும் ஜனாதிபதி ஆட்சியினால் பதிலீடு செய்யப்பட்டது. எனவே 1987இல் யூகோசிலாவியாவில் தேசியவாதம் மிகவும் உறுதியான அரசியல் நடைமுறையாக வளரத் தொடங்கியபோது. அது சடுதியாக எங்கிருந்தோ வந்ததல்ல. கொதிப்பான இரத்தத்தின் ஒரு விளைவுமல்ல. அது அரசியல் முறைமையின் நேரடி விளைவாயிருந்தது.

சேர்பியாவில் டிட்டோவுக்குப் பிந்திய முதலாவது கம்யூனிசத் தலைவரான சுலோபொடன் மிலோசெவிக் 1987இல் தேசியவாதச்சீட்டை ஆடத்தொடங்கியதுடன்தான் தேசியவாதம் புறமுனைப்புடன் புதுப்பிக்கப்பட்டது. ஈராண்டுகளினுள் சேர்பியாவில் தேசியவாத அரசியல், முதலில் சுலோவினியாவிலிருந்தும் பின்னர் குரோஷியாவிலிருந்தும் பதிற்செயல்களைத் தோற்றுவித்துவிட்டது. வெவ்வேறு குடியரசுகளின் தலைமைத்துவங்களினால் தேசியவாதப் போட்டி மனப்பான்மைகள் வெளிப்படுத்தப்படத்தொடங்கியவுடன் உருவாகிய பிரிவுக்கான உந்துவிசைக்கு சுழற்சிமுறையிலான ஜனாதிபதி முறைமை வழிவகுத்தது.

எனினும், மிலோசெவிக்கின் நோக்கம் கூட்டாட்சியை அழிப்பதாயிருக்கவில்லை. அவரின் ஆரம்ப இலக்கு சேர்பியக் கட்சியின் கட்டுப்பாட்டை ஈட்டும்பொருட்டுப் பொது மக்களின் ஆதரவைத் திரட்டுவதாயிருந்தது (லிட்டில் மற்றும் சில்பர் 1996). அவர் பயனுறுதியுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு எண்ணியிருந்த திட்டப்படியான மனக்குறை உணர்வுபற்றிய முதலாவது சந்தர்ப்பம், 1986இல் சேர்பியக்கலை விஞ்ஞானக் கழகத்தினால் வெளியிடப்பட்ட 50 பக்க நிருபமொன்றில் அவருக்குக் கிடைத்தது. இப்போது பிரபலமாயுள்ள இவ் ஆவணத்தில், பதினாறு கல்விமான்கள் 1974இன் யூகோசிலாவிய அரசியலமைப்பின்கீழ் சேர்ப் மக்கள் ஓரகமாக நடத்தப்படுவது பற்றியும், குறிப்பாக கொசோவோவில் சேர்பியர்களுக்கெதிரான இனப் படுகொலைகள் பற்றியும் விரிவாக முறையிட்டிருந்தனர்(வெற்லெசன் 2000).

அரசியல் அணிதிரட்டலில் தமது சுயநலத்துக்காகப் பயன்படுத்திய மனக்கசப்புணர்வையும், அநீதியையும் மிலோசெவிக் உண்மையாக நம்பவும், உணரவும் செய்தாரோ இல்லையோ என்பது இங்குள்ள வாதத்துக்குப் பொருத்தமற்றது. முன்னைய யூகோசிலாவியாவில், தேசியவாதச்சீட்டை முதலில் ஆடிய மிலோசெவிக்கோ, அதனை இரண்டாவதாக ஆடிய சுலோவினியாவின் தலைவர் மிலான் குகனோ தேசியவாதக் கருத்துக்களை முன்னர் கொண்டிருந்தனரென்பதற்குப் பதிவுச்சான்றெதுவும் இருக்கவில்லை. மறுபுறத்தில் குரோஷியாவின் பிரான்ஜோ ருட்ஜமன், பொஸ்னியத் தலைவர் அலிய இஸட்பெகொவிக் மற்றும் கொசோவாவை சேர்ந்த அல்பேனியர்களின் தலைமைத்துவத்துக்கான பல்வேறு போட்டியாளர்கள் ஆகிய அனைவரும் கொள்கைப்படி தேசியவாதிகளாகக் கருதப்படலாம். இத்தனிப்பட்டவர்கள் எல்லோரையும் பொறுத்தவரையில், அவர்களின் தனிப்பட்ட வேறுபாடுகள் எவ்வாறிருப்பினும், அவர்கள் அனைவரும் இன்றியமையாதவாறு, அதே முறையில்தான் அதிகாரத்துக்கு வந்தனர். இது தேசிய அநீதி என்ற தொனிப்பொருளைச் சுற்றிப் பொது மக்களின் ஆதரவைத் திட்டுவதன் மூலம் ஆகும். அநீதி பற்றிய போட்டிகரமான இவ்வுணர்வலைகள் யுகோசிலாவியா வெடித்துச் சிதறியதற்கான வெடிமருந்துக் கலவையை உருவாக்கின.

அவ்வாறே முன்னைய யூகோசிலாவியாவின் குடிசன ஆக்கக் கூறுகளில் ஏதேனும் ஒன்றில் (அல்லது ஒன்றுக்குக் கூடியவற்றில்) காணப்பட்ட அநீதி பற்றிய உணர்வை வெளியிலிருந்து அவதானிக்கும் ஒருவர் பகிர்ந்து கொள்ளக் கூடுமாவென்பதும் உண்மையில் ஒரு பொருட்டல்ல. அல்லது அத்தகைய அவதானிப்பாளர் ஒரு பக்கச்சார்பற்ற மதிப்பீடென்ற வகையில் அத்தலைவர்களில் ஒருவரிடம் (அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம்) தம்மைப் பின்பற்றுபவர்கள் ஆளாக்கப்பட்ட அநீதியை நிவர்த்தி செய்வதற்கான அரசியல் நிகழ்ச்சித்திட்டமொன்று இருந்ததென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதும் முக்கியமானதல்ல. இங்கு இன்றியமையாதது மக்கள் அதனை உணர்கின்றார்களா என்பதும் ஒரு தலைவர் அதனைத் தமது சுயநலத்துக்குப் பயன்படுத்த முடியுமா என்பதும், அவ்வாறு பயன்படுத்துவாரா என்பதும் மட்டுமேயாகும்.

எனவே இன மோதுகைகள் என்று பொதுவாகக் கூறப்படுபவை முடிவில், இன முகமூடியொன்றைப் பின்னர் அணிந்துகொள்கின்ற, அதிகாரத்தின் மீதான அல்லது (இங்கு விவாதிக்கப்படாத சந்தர்ப்பங்களில் உள்ளவாறான சுற்றாடல் வளங்கள் அடங்கலாக) பொருளாதார வளங்களுக்கான வாய்ப்பக்கான மோதுகைகளாகும். இனவேறுபாடு ஆயுத மோதுகைக்கான தனித்த ஒரே காரணமாகவன்றி அரசியல் தலைவர்களுக்கு அணி திரட்டுவதற்கான இன வேறுபாடு விளக்கத்தில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்ற போதிலும் அதில் மேலாண்மை செலுத்தக்கூடாது.

அரசியல் அணி திரட்டலுக்கான இக்குறிப்பிட்ட உத்தியின்மீது கவனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு இன முகமூடியென்ற இவ்வுருவகத்தைப் பயன்படுத்துதலானது, வன்முறையான மோதுகையிலோ அதற்குப் புறம்பாகவோ, அடையாளம் பற்றிய உணர்வின் யதார்த்தத்தை அல்லது அதன் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கூறுவதற்கான ஒரு முயற்சியாகப் பொருள்கொள்ளப்படலாகாது. எடுத்துக்காட்டாக, 1990களின் ரஷ்ய செச்செனனிய யுத்தங்கள், செச்சென்னிய தரப்பில் ஆழமான, தெளிவான, கசப்பான இன அடையாளம் பற்றிய உணர்வையும் அதேபோன்று செச்சென்னியர்களுக்கெதிரான மிகப் பரந்த அளவிலாள ரஷ்ய இனவாதத்தையும் முக்கிய பண்பாகக் கொண்டிருந்ததென்பதில் ஐயத்துக்கிடமில்லை. 200 ஆண்டுகளுக்கு மேலாகச் செச்சென்னிய இயக்கங்கள் ரஷ்யக்கட்டுப்பாட்டை எதிர்த்துவந்துள்ளன. இருந்தபோதிலும், ரஷ்யாவுக்கும் செச்சினியாவுக்கும் இடையிலான மோதுகை எளிமையாக இனக்குழுமம் பற்றியதெனப் பகுப்பாய்வு செய்யப்படுமாயின் அதனை முறையாக விளங்கிக்கொள்ளமுடியாது.

இம்மோதுகைக்கும் யூகோசிலாவியா பிரிந்து போனதற்கும் இடையில் கவனிக்கத்தக்க இசைவுப் பொருத்தங்கள் உள்ளன. 1994 இல் செச்னியாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான யுத்தம் படிப்படியாக வெடித்தமைக்கான விளக்கத்தின் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியாகப் புதிய மற்றும் பழைய அரசியல் உயர்குடியினர்களுக்கிடையில் அதிகாரத்துக்கான போராட்டம் விளங்கியது. 1991 ஆகஸ்டிலும், செப்டம்பரிலும் ஜெனரல் டிஸோக்கர் டுடாயெவ் மற்றும் அவரின் சகாக்கள் செச்சினியாவில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் அதுவொரு முக்கிய காரணியாயிருந்தது. (ரிஷ்கொவ் 1997, ப.200-206). பகுதியளவில் இருதரப்புகளிலும் காணப்பட்ட அரசாங்கக் குறைபாடுகளினாலும் (லீவன் 1998, ப. 80-84, 94-96) பகுதியளவில் செச்சினியாவிலும் (ரிஷ்கொவ் 1997, ப.216-218) மொஸ்கோவிலும் (ஷப்பிறோ 1995) அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டியாளர்களின் சூழ்ச்சித் திறத்தினாலும் செச்சினியத் தலைவர்களும், ரஷ்யத் தலைவர்களும் 1994 இன் இரண்டாம் அரையாண்டின் போது அவர்களின் பிணக்குகள் முழு அளவிலான யுத்தமாக ஏற்றம் பெறுவதைத் தவிர்க்க முடியாதவர்களாத் தோன்றினர்.



இதிலுள்ள அவலம் இன முகமூடியைப் போட்டுக்கொண்டபின்னர் அதனைக் கழற்றுவது மிகக் கஷ்டமானதென்பதுதான். குறிப்பாக நெருக்கடியும் யுத்தமும் சூழ்ந்த நேரத்தில், புத்துயிரளிக்கப்பட்ட இன அடையாள உணர்வு, மனக் கசப்புணர்வுடனும், மனக்குறையுடனும் ஒன்றிணைகின்றபோது அது நீடித்ததும், சுழல் முறையானதுமான இலகுவாக இணங்குவிக்க முடியாத பகைமையை உருவாக்க முடியும்.

இதற்கான பிரதான சமகால உதாரணத்தை புருண்டியினதும், ருவாண்டாவினதும் ஹுட்டு/ டுட்ஸி போட்டிகளில் காண முடியும். இவை நினைவுக்கெட்டாத பழங்காலந்தொட்டு வருவனவல்ல. காலனித்துவ நிருவாகிகள்தான் இரு குழுக்களையும் வேறுபட்டனவென வரையறுத்து, ஒரு குழுவின் பாதிப்பில் மற்றையதற்கு ஆதரவளித்து வந்தனர். இது மனக்கசப்பைத் தோற்றுவித்தது. சுதந்திரம்பெற்ற காலத்திலிருந்து அரசியல் தலைவர்கள் அதிகாரத்தைப் பேணுவதற்காக(அல்லது அதற்கு அறைகூவல் விடுப்பதற்காக) இக்குழும ரீதியான மனக்குறையைத் திட்டமிட்டமுறையில் தமது சுயநலத்துக்குப் பயன்படுத்தியதன் மூலம் நாற்பதாண்டு கால யுத்தங்களையும், படுகொலைகளையும் விளைவித்தனர். (கொப்சன் 1994) இலங்கையில் சிங்கள/ தமிழ் மோதுகையும் ஒத்தவகையில் சுதந்திரத்துக்குப்பிந்திய ஆண்டுகளில் ஒப்பிடத்தக்க மனக்குறைபாடுகள் பற்றிய உணர்வுகள் வழிவகுத்த நீடிக்கும் சிவில் யுத்தமாக வெளிப்படுகிறது.(உயன்கொட 1996).

இம்மோதுகைகளுக்கு வழிவகுத்த அணிதிரட்டல் முறைவழியில் திரும்பத் திரும்ப அவதானிக்கக்கூடிய அம்சங்களில் ஒன்றுதான், ஒரு தரப்பில் அல்லது இரு தரப்பிலும் குறிப்பிட்ட காரணத்துக்காக வெளிப்படுத்தப்பட்ட உணர்ச்சிகரமான பொதுமக்களின் ஆதரவாகும். அக்கரணத்தின் மீதான இந்நம்பிக்கை அதன் நேர்மையான தன்மையில், அதன் நீதியானதன்மையில் வைக்கப்பட்ட ஒரு

நம்பிக்கையாகும். 1998இலும் 1999இலும் யுத்தத்துக்கு முன்னர் கொசோவோவிலுள்ள அல்பேனியர்களும், செர்பியர்களும், அவர்கள் எதிர்நோக்கியதாக அவர்கள் கருதிய அநீதிகளையிட்டுக் கடுமையாகச் சீற்றமடைந்தனர். புருண்டியிலும் ருவாண்டாவிலுமுள்ள ஹுட்டுகளும் டூட்ஸிகளும் ஒருவர் மற்றவருக்கிழைத்த அநீதிகளைப்பற்றி உணர்ச்சிகரமாகப் பேசக்கூடியவர்களாயுள்ளனர். இலங்கையில் சிங்களவர்களும், தமிழர்களும் ஒருவர் மற்றவரால் அனுபவித்த அநீதிகளை எண்ணிப்பார்க்கக் கூடியவர்களாயுள்ளனர். அநேக ஆயுத மோதுகைகளில் இன்று ஒரு தரப்பு அல்லது இரு தரப்புகளும் கையாளுகின்ற உபாயங்களும், உத்திகளும், பொஸ்னியா-ஹெர்சிகொவினாவிலும் ருவண்டாவிலும் மேற்கொள்ளப்பட்ட இனச்சுத்திகரிப்பும், படுகொலைக்களரியும் திட்டமிட்ட பாலியல் வன்புணர்ச்சியும், மற்றும் செச்சினியாவில் சிவிலியன் பிரதேசங்கள் மீது குண்டுத்தாக்குதல் ஆகியன சிவிலியன்கள் மீதான நேரடித் தாக்குதலை உள்ளடக்குகின்றன.

இத்தகைய திகில் சம்பவங்களின் நினைவு அடுத்த தடவையொன்று வருகின்றபோது திரட்டுவதற்கு வளமான ஒரு தளத்தை வழங்குகின்ற வகையில் ஒரு கசப்பான குழும அடையாள உணர்வை மறக்காதிருக்கச் செய்கின்றது.

## 8. முடிவுரை

ஆயுத மோதுகைகளின் காரணங்கள்பற்றி இப்போது ஒரு குறிப்பிடத்தக்க பயனுள்ள, வளர்ந்து வருகின்ற விடயவிதானத் தொகுதியொன்றுள்ளது. இதுவரையுள்ள இவ்விடயவிதானத்தில் கோட்பாட்டியலான முடிவுகள் தவிர்க்க முடியாதவாறு மட்டுப்படுத்தப்பட்டனவாயுள்ளபோதிலும், அவை மோசமான பொருளாதார நிலைமைகள், அரசியல் வாய்ப்புகள் இல்லாமை, சுற்றாடல் தீங்கு ஆகிய முக்கிய பிரச்சினைகளின் மீது எமது கவனத்தை வெளிப்படுத்துகின்றன. அதேவேளையில், வேற்றுமையைத் தன்னளவில் ஆயுத மோதுகைக்கு ஒரு காரணமாகக் கருதக்கூடாதென்று எம்மை எச்சரிக்கின்றதனால் அவை முக்கியமானவையும் ஆகும்.



இதுவரை இவ்வாராய்ச்சி பிரதானமாக இன்று ஆயுத மோதுகையின் பின்னால் பொதுவாயுள்ள நீண்டகாலச் சமூக - பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் பற்றியதாயிருந்தது. ஆயுத மோதுகையின் குறித்த விடயங்களின் பகுப்பாய்வுக்கு ஒரு பங்களிப்பாக அதனைப் பயன்படுத்துவதாயின், விடய ஆய்வு எதுவும் முனைப்படுத்திக் காட்டும் குறுகியகாலக் காரணங்களுடன் இந்நீண்டகால அடிப்படை நிலைமைகளைத் தொடர்புபடுத்துவதற்கான ஒரு வழியையும் நாம் காணவேண்டும்.

இக்கட்டுரையில் அத்தகைய ஓர் இணைப்பைச் சாதிப்பதற்கான தொடர்புடைய இரு வழிமுறைகளை நாம் ஆராய்ந்துள்ளோம். முதலாவது, கோட்பாட்டியலான மற்றும் அனுபவரீதியான மூலங்கள் இரண்டையும் ஒழுங்குபடுத்துவதற்கு உதவுகின்றதும், அதன்மூலம் பகுப்பாய்வை வழிநடத்தக் கூடியதுமான ஒரு முறையியல். இரண்டாவது, நீண்டகால மற்றும் குறுகியகால விடயங்களை - நீதி மற்றும் அணி திரட்டல் பற்றிய எண்ணக்கருக்களை இணைக்கின்றதான எண்ணக்கருசார்ந்த ஒருங்கிணைத்தல் உலகும் அதனுள் அமைந்துள்ள நாடுகளும் ஆகும். சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நேர்மைக்கேடாக நடாத்தப்படும், சிவிலியன்கள்மீதான நேரடித் தாக்குதல் முறைமைகள் கட்டமைக்கப்பட்டுள்ள வரையில், அவ் அநீதியை உணர்கின்ற மக்களும், அதனைத் தமது சுயநலத்துக்காகப் பயன்படுத்துவதன் மூலம் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்துகின்ற தலைவர்களும் எப்போதும் இருப்பர். எனவே மோதுகைப் பகுப்பாய்வுக்கும், சமாதானத்துக்கும் உயிர்நாடியானது நீதியேயாகும்.

## 9. உசாத்துணை மற்றும் மேலும் வாசிப்பதற்கானவை


Adelman, Howard and Astri Suhrke 1996. "Early Warning and Conflict Management," in Joint Evaluation of Emergency Assistance to Rwanda, *The International Response to Conflict and Genocide: Lessons from the Rwanda Experience*, Copenhagen: DANIDA.

Anderson, Benedict 1991. *Imagined Communities*, London: Verso.

Auvinen, Juha 1997. "Political Conflict in Less Developed Countries 198–89," *Journal of Peace Research*, 34, 2, 177–195.

Avery, William P, and David P. Rapkin 1986. "World Markets and Political Instability within Less Developed Countries," *Cooperation and Conflict*, 21, 2, 99–117.

Calhoun, Craig 1997. *Nationalism*, Buckingham: Open University Press.

Chan, Steve 1997. "In Search of Democratic Peace: Problems and Promise," *Mershon International Studies Review*, 41 (Supplement 1), 59–91.

Clausewitz, Carl von 1832/1976. *On War* (Translated by Howard, Michael and Peter Paret), Princeton, NJ: Princeton University Press.

Collier, Paul 1999. "Doing Well out of War," Paper prepared for Conference on Economic Agendas in Civil Wars, London, April 26–27, 1999.

Collier, Paul, and Anke Hoeffler 1999. *Justice-Seeking and Loot-Seeking in Civil War*, Washington, DC: The World Bank/CSAE.

Copson, Raymond W. 1994. *Africa's Wars and Prospects for Peace*, New York: M.E. Sharpe.

Dessler, David 1994. "How to Sort Causes in the Study of Environmental Change and Violent Conflict," *in* Græger and Smith, op. cit.





Gellner, Ernest 1983. *Nations and Nationalism*, Oxford: Blackwell.

Gleditsch, Nils Petter (ed.) 1997. *Conflict and the Environment*, Dordrecht: Kluwer Academic.

Gleditsch, Nils Petter 1998. "Armed Conflict and the Environment: A Critique of the Literature," *Journal of Peace Research*, 35, 3, 381–400.

v. d. Goor, L., K. Rupesinghe and P. Sciarone (eds.) 1996. *Between Development and Destruction: An Enquiry into the Causes of Conflict in Post-Colonial States*, The Hague: Netherlands Ministry of Foreign Affairs/The Netherlands Insititute of International Relations.

Græger, N and D. Smith (eds.) 1994. *Environment, Poverty, Conflict*, Oslo: International Peace Research Institute.

Gurr, Ted Robert 1970. *Why Men Rebel*, Princeton, NJ: Princeton University Press.

Gurr, Ted Robert 1995. *Minorities at risk: a global view of ethnopolitical conflicts*, Washington, D.C.: United States Institute of Peace Press.

Hauge, Wenche, and Tanja Ellingsen 1998. "Beyond Environmental Scarcity: Causal Pathways to Conflict,"*Journal of Peace Research*, 35, 3, 299–317.

Hegre, Håvard, Scott Gates and Nils Petter Gleditsch 1999. *Estimating the Relative Risk of Civil War* (unpublished paper, International Peace Research Institute, Oslo).

Homer-Dixon, Thomas 1994. "Environmental Scarcities and Violent Conflict: Evidence from Cases," *International Security*, 19, 1, 5–40.

Homer-Dixon, Thomas 1999. *Environment, scarcity and violence*, Princeton, NJ: Princeton University Press.

Horowitz, David 1985. *Ethnic Groups in Conflict*, Berkeley, Ca: University of California Press.

International Commission on the Balkans 1996. *Unfinished Peace*, Washington, DC: Carnegie Endowment for Peace.

Jaggers, Keith, and Ted Robert Gurr 1995. "Tracking Democracy‘s Third Wave with the Polity III Data,"*Journal of Peace Research*, 32, 4, 469–482.

Judah, Tim 1997. *The Serbs: History, Myth and the Destruction of Yugoslavia*, New Haven, Conn: Yale University Press.

Judah, Tim 1999. "Kosovo‘s Road to War," *Survival*, 41, 2, 5–18.

Kamenka, E. (ed.) 1976. *Nationalism: The Nature and Evolution of an Idea*, London: Edward Arnold.

Kaufman, Chaim 1996. "Possible and Impossible Solutions to Ethnic Civil Wars," *International Security*, 20, 4, 136–175.

Keegan, John 1994. *A History of Warfare*, New York, NY: Random House/Vintage.

Levy, Jack S. 1989. "The Causes of War: A Review Of Theories And Evidence," in Philip E. Tetlock et al. (eds.) *Behavior, Society, and Nuclear War. Vol. 1*, New York: Oxford University Press, 209-333.

Lieven, Anatol 1998. *Chechnya, Tombstone of Russian Power*, London, New Haven, Conn: Yale University Press.

Lipschutz, Ronnie D. 1997. "Environmental Conflict and Environmental Determinism: The Relative Importance of Social and Natural Factors," *in* Gleditsch, op. cit.

Little, Alan and Laura Silber 1995. *Yugoslavia: Death of a Nation*, New York, NY: Penguin Books.

MacMillan, John 1996. "Democracies don‘t fight: a case of the wrong research agenda?" *Review of International Studies*, 22, 3, 275–299.

Plamenatz, John 1976. "Two Types of Nationalism," *in* Kamenka, op. cit.

Rapoport, Anatol 1989. *The Origins of Violence: Approaches to the Study of Conflict*, New York, NY: Paragon House.

Risse-Kappen, Thomas 1995. "Democratic Peace – Warlike Democracies? A Social Constructivist Interpretation of the Liberal Argument," *European Journal of International Relations*, 1, 4, 491-517.

Rummel, R.J. 1995. "Democracies ARE Less Warlike Than Other Regimes," *European Journal of International Relations*, 1, 4, 457–479.

Rupesinghe, K. and K. Mumtaz (eds.) 1996. *Internal Conflicts in South Asia*, London: Sage.

Russett, Bruce 1993. *Grasping the Democratic Peace*, Princeton, NJ: Princeton University Press.

Seton-Watson, Hugh 1977. *Nations and States. An inquiry into the origins of nations and the politics of nationalism*, London: Methuen.

Shapiro, Margaret 1995. "Return of the Apparatchiks," *International Herald Tribune*, 16 January.

Singer, David 1996. "Armed Conflict in the Former Colonial Regions: From Classification to Explanation," *in* v. d. Goor et. al., op. cit.

Smith, Anthony D. 1983. *Theories of Nationalism*, 2nd ed., London: Duckworth.

Smith, Dan 1997. *The State of War and Peace Atlas*, London & New York, NY: Penguin Books.

Smith, Dan and Øyvind Østerud 1995. *Nation-State, Nationalism and Political Identity*, Oslo: University of Oslo.

Starr, Harvey 1997. "Democracy and Integration: Why Democracies Don‘t Fight Each Other," *Journal of Peace Research*, 34, 2, 153–162.

Taber, Robert 1970. *The War of the Flea: A Study of Guerrilla Warfare Theory and Practice*, St. Albans: Paladin.

Tishkov, Valery 1997. *Ethnicity, Nationalism and Conflict in and after the Soviet Union*, London: Sage.

Uyangoda, Jayadeva 1996. "Militarization, Violent State, Violent Society: Sri Lanka," *in* Rupesinghe, op. cit.

Vasquez, John A. 1987. "The Steps to War: Toward a Scientific Explanation of Correlates of War Findings," *World Politics*, XL (October), 108–145.

Vetlesen, Arne Johan 2000. "Genocide: A Case for the Responsibility of the Bystander," *Journal of Peace Research*, 37, 4, 519-532.

Wallensteen, Peter and Margareta Sollenberg 1996. "The End of International War? Armed Conflict 1989-95," *Journal of Peace Research*, 33, 3, 353–370.

Wallensteen, Peter and Margareta Sollenberg 1997. "Armed Conflicts, Conflict Termination and Peace Agreements, 1989-96, " *Journal of Peace Research*, 34, 3, 339–358.

Wallensteen, Peter and Margareta Sollenberg 1998. "Armed Conflict and Regional Conflict Complexes, 1989-97," *Journal of Peace Research*, 35, 5, 621–634.

Wallensteen, Peter and Margareta Sollenberg 1999. "Armed Conflict, 1989-98," *Journal of Peace Research*, 36, 5, 593–606.

Wallenstein, Peter and Margareta Sollenberg 2000. "Armed Conflict, 1989-1999," *Journal of Peace Research*, 37, 5, 635–649.

Welch, David 1993. *Justice and the Genesis of War*, Cambridge: Cambridge University Press.